# தூம்

பல்சுவை மின்னிதழ்

இதழ் 03 16.03.2020



## தேசவழமைச்சட்டம்

## ஜனகன் மகள் ஜானகி

ஈழத்து ஆளுமை

## சிற்பி

## பெருவெள்ளத்திற்கான பயணம்

# எல்லோரையும் வாழ வைப்போம்!

-ஆசிரியர்-

நமது தேசத்தில் அடைக்கப்பட்ட கதவுகள் யாவும் மெல்ல மெல்லத் திறக்கப்படுகின்றன. மாவட்டங்களின் எல்லைக்கோடுகளில் போடப்பட்டிருந்த முள் வேலிகள் அகற்றப்படுகின்றன. மழைக்காளான்களாய் மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கிறோம். அலுவலகங்கள் யாவும் பெரும்பாலும் திறக்கப்பட்டுவிட்டன. மதவழிபாடுகளுக்கான, விழாக்களுக்கான கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்தளங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழகங்களும், பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. சுருக்கமாக சொல்லப்போனால், மூன்றரை மாதங்களுக்கு முன் எப்படி வாழ்ந்தோமோ அந்த வாழ்க்கைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால்.....

தற்போது தற்காலிக நிவாரணமே கிடைத்துள்ளது. இந்த நிவாரணத்திற்கு காரணமான அனைவரும் போற்றுதலுக்குரியவர்கள். எல்லோரும் வீடுகளுக்குள் முடங்கிய வேளையில் களத்தில் இரவு பகலாக பணியாற்றிய மருத்துவ துறையினர் எல்லோரும் தெய்வத்திற்கு சமானமானவர்கள். பலரது அர்ப்பணிப்பின் பயனே இன்றைய எமது வழமைக்கு திரும்புதலுக்கு காரணமாகியுள்ளது. ஆனால்...

உலகம் ஸ்தம்பிதமடைய காரணமான கொரோனாவிலிருந்து முற்று முழுதாக நாம் விடுபட்டுவிடவில்லை. எமது காலநிலைகளை ஒத்த எம் அயல்நாடு இந்தியா மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. நாமும் அசண்டையீனமாக இருந்து விடுவோமானால் எந்த சந்தர்ப்பத்திலும் அபாய நிலைக்குள் போய்விடலாம். பலருடைய மூன்று மாத போராட்டம் வீணாகிப்போக ஒருவர் போதும்.

தொற்றக்கூடிய நோய். யாரிடமிருந்தும் யாருக்கும் தோற்றலாம். கிருமி கண்ணுக்கு தெரியாது. கிருமியோடு இருப்பவரை சாதாரணமாக இனம் காணவும் இயலாது. கிருமியைக் கொடுத்தவர் அடையாளங்களின்றி சகஜமாக வாழ, அவரிடமிருந்து கிருமியை பெற்றவர் மரணிக்கவும் சந்தர்ப்பம் உள்ளது. ஏனெனில் கிருமிகளுக்கு எதிராக போராடும் நோய் எதிர்ப்பு சக்தி ஆளுக்கு ஆள் மாறுபடும். மேற்சொன்ன விடயங்களை எல்லோருக்கும் புரிய வைக்கவும் முடியாது. இந்த கொரோனா மிகப்பெரிய அபாயம் என்பதற்கு மேற்சொன்ன சிக்கல் நிலைமைகளே காரணம். இந்த அபாயங்களை பாமரர் முதல் படித்தவர் வரை விளங்கிக்கொள்வது தான் முக்கியமானது.

நாம் வாழும் காலத்தில் இன்னொரு உயிர் வாழ உதவி புரிவது என்பது மிகவும் புண்ணியமான கைங்கரியம்! அடுத்தவர்களை வாழ வைக்க வேண்டுமா? அருமையான சந்தர்ப்பத்தை காலம் அளித்திருக்கிறது. கொரோனாவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் வரை அதாவது அதற்கான மருந்து கண்டுபிடிக்கப்படும் வரை சுத்தமாக இருப்போம் சுகாதாரமாக இருப்போம் இயன்றவரை தனித்திருப்போம் எம்மை நாமே காத்திருப்போம்.

# அட்டைப்படம் பற்றி...

## ஒளிப்படம் : ஜீவா ஷஜீவன்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று உலக சமய சமத்துவத்திற்கான, சர்வமத புரிதலுக்குமான குரல் திருவாதவூரராகிய மணிவாசகரிடமிருந்து பலநூறு ஆண்டுகளுக்கு முன் ஓங்கி ஒலிக்கிறது!

காலங்கள் கடந்த பின்னேயும், கிறிஸ்தவ பாதிரிமார்களும், இசுலாமிய உலாமாக்களும் அந்த குரலை கொண்டாடி மகிழ்கின்றனர்! பக்தி மார்க்கம் செழிப்பதற்கு ஒலித்த ஓசையாக வானியல் தெளிவு பெற்று அண்டத்தின் கோட்பாடுகளை உரைத்த வார்த்தைகளாக கருவிலிருந்து உயிர்க்கூர்ப்பு வரை ஆய்ந்து சொல்லிய அற்புத குரலாக சிவன் பொற்பாதமே நாடிய பெருமானின் திருவாசகத்தை, செந்நெறி காக்கும் எங்கள் கலாநிதி ஆறு.திருமுருகனார் நாவற்குழியில் நல்லாயமாய் செய்தார்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஈசனை காதலித்து பாடிய திருவாசகத்தை, தேசத்தை காதலித்து, தெய்வமாகியவர்களின் நடுகற்களை செதுக்கிய உளிகளே இங்கு செதுக்கின. இவ்அரும்பணியின் முன்னே அமையப்பெற்ற கற்றேரில், கசிந்துருகும் திருவாசம் தந்த மணிவாசகரின் திருக்கோலம் துமியின் மூன்றாவது மின்னிதழ் முகப்பில் பதிகிறது.

ஏதிர்வரும் 26ஆம் திகதி மணிவாசகர் குருபூசை தினத்தில் திருவாசகம் இசைக்க திருவாசக அரண்மனை அனைவரையும் அழைக்கிறது!

இவ்விதழில்

# துமித்தவை...

04 வள்ளுவமேகலை

06 பங்குச்சந்தை பயமா? பயனா?

08 சிங்ககிரித்தலைவன்

10 உலகின் ஓசை அடங்கும் போது

13 ஈழத்தின் சித்த மருத்துவம்

14 கோடீஸ்வரனின் வழக்கு

16 ஜனகன் மகள் ஜானகி

19 கொரோனா நினைவுகள்

21 என் இதயம் எழுதும் சொல்

22 கந்தரோடையின் பேரறிஞர் சிற்பி சி.சிவசரவணபவன்

25 சித்திராங்கதா

27 தேசவழமைச்சட்டம்

29 யார் இந்த கபிலர்?

31 இன்சுலினும் உடல் நிறையும்

32 ஒற்றைக்கால் மனிதம்

33 சிறுவர்கள் பக்கம்

34 மின்மினி

35 மூன்றாம் உலகப்போர்

37 யுவராஜ் எனும் யுகவீரன்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

# வள்ளுவமேகலை

ததிருமாறன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
மாநிலக் கல்லூரி
சென்னை.





தமிழில் எத்தனையோ காப்பியங்கள், இலக்கியங்கள் தோன்றின அவையெல்லாம் கால வெள்ளத்தில் நமக்கு காணக்கிடைக்காமல் அழிந்தும் போயின. மயிலை சீனி வேங்கடசாமி என்ற முதுபெரும் தமிழறிஞர் எழுதிய மறைந்து போன தமிழ் நூல்கள் என்ற புத்தகத்தை ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டும் நம்மிடம் இருந்த செல்வங்கள் எவ்வளவு, நாம் தொலைத்தவை எத்தனை என்பது அப்போது தான் நமக்கு விளங்கும்.

சில பெரியவர்கள் தமிழில் தோன்றியவற்றில் எது தமிழுக்கு தேவையோ அது நிலைத்து, தேவையற்றது காலப்போக்கில் அழிந்து போயின' என்று சமாதானம் சொல்ல முயல்கிறார்கள். உண்மையில் நம் தவறுகளை மறைக்க நாமே உருவாக்கிக் கொள்கிற வெற்று வாதம் இது. தமிழர் மனத்திலிருந்த மதக்காழ்ப்பினால், அறிவுக்கு ஒவ்வாத மதச் சண்டைகளால் ஒப்பற்ற தமிழ்ச் செல்வங்கள் அழிக்கப்பட்டன என்பதே வரலாறு. ஆம் அவை அழிய தமிழர்களின் பொறுப்பின்மையே காரணம். இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். செய்த தவறை ஒப்புக்கொண்டால்தான் வரலாற்றில் மீண்டும் அந்த தவறு நடக்காமல் பார்த்துக் கொள்கிற கவனம் அடுத்த தலைமுறைக்கு வந்துசேரும். நல்ல வேளையாக பாட்டன் வள்ளுவனின் மதம் இன்னது என்று உறுதியாகச் சொல்ல எவனிடமும் சான்றுகள் இல்லை. அப்படி கிடைத்திருந்தால் ஒன்று வள்ளுவன் மதத்திற்குள் அடக்கப்பட்டிருப்பான் இல்லையேல் மதத்தின் பெயரால் அழிக்கப்பட்டிருப்பான்.

சங்க இலக்கியம் தொட்டு, சமகால இலக்கியம் வரையில் தமிழில் தோன்றிய எல்லா இலக்கியங்களிலும் வள்ளுவனின் தாக்கம் உண்டு. வள்ளுவனை எடுத்தாளாத படைப்பாளிகளே தமிழில் இல்லை எனலாம். ஆனால் ஒரு சந்தேகம்! எல்லா இலக்கியங்களும் வள்ளுவரின் கருத்தை எடுத்தாண்டிருக்கிறது சரி, ஆனால்! உண்மையில் வள்ளுவரின் கருத்தை உள்வாங்கி உச்சம் தொட்ட இலக்கியம் எது?

விளையாட்டாக தேடத் தொடங்கினேன் இலக்கியங்களில் வள்ளுவனை.

இளங்கோ, கம்பன், பாரதி போன்றோர் பட்டியலில் வருவார்கள் என்று எனக்கு தெரியும். ஆனால் எதிர்பாராத விதமாக அவர்களை பட்டியலில் பின்னிறுத்தி வரிசையில் முன் நின்றார் சாத்தனார்.

தமிழ் காப்பிய வரலாற்றில் அல்லது தமிழ் இலக்கிய வரலாற்றில் வள்ளுவத்தையும், வள்ளுவனையும் வெளிப்படையாக குறிப்பிட்டு பேசிய முதல் காப்பியம் மணிமேகலை தான்.

மணிமேகலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கற்புடைய மாதரின் திறம் இதுவெனக்காட்ட விரும்புகிறார் சாத்தனார். எத்தனையோ மணி நேரம் யோசித்துப் பார்த்தும் கூட புதிதாய் ஒரு சிந்தனை அவருக்கு ஊற்றெடுக்கவில்லை. ஒரு கட்டத்தில் வள்ளுவனை விடவா நாம் புதிதாக ஒன்றை பேசிவிட போகிறோம் என்று எண்ணினாரோ என்னவோ, இப்படி ஒரு பாடலை எழுதுகிறார்,

**"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்**
**பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"**

தெய்வத்தை வணங்காது கணவனையே தெய்வமாக போற்றுபவள் பெய் என்று சொன்னால், சொன்ன மாத்திரத்திலேயே மழை பெருமழையாய் பெய்யும் என்று அந்த பொய்யில் புலவனான வள்ளுவன் சொன்னானே அதைக் கேளாய் என்று சொல்லி, படைப்புகளில் வள்ளுவத்தை மேற்கோள் காட்டும் மரபை முதல்முதலில் தொடங்கி வைக்கிறார் சாத்தனார்.

மேற்கோள் காட்டுவதோடு மட்டுமல்ல ஒவ்வொரு அசைவிலும் வள்ளுவரின் கருத்துக்களை மணிமேகலை அசைபோடுகிறது, விளக்குகிறது, பொருளுரைத்துப் பேசுகிறது. எல்லாவற்றையும் சுட்டிக் காட்டுவது கடினம்.

காப்பியத்தின் உயிர் நிலையை மட்டும் சற்றே உரசிப் பார்ப்போம்,

**"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

என்ற உயர்ந்த தத்துவத்தை உயிர்நாதமாகக் கொண்டது மணிமேகலை. மண் திணிக்கப்பட்ட இந்த உலகில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் எவன் ஒருவன்




உணவளிக்கிறானோ, அவன் தான் உயிரளிக்கும் இறைவனாகிறான் என்பது இதன் பொருள்.

ஒரு நாட்டினில் வாழும் மக்கள் யாரும் பசியோடு வாழக் கூடாது என்பதை வலியுறுத்துகிற மணிமேகலை,

**“காணார், கேளார், கால்முடப் பட்டோர்**
**பேணுநர் இல்லோர், பிணிநடுக் குற்றோர்**
**யாவரும் வருக.’”**

என்று அழைத்து கண் தெரியாதவர், காது கேளாதவர், கால் முடப்பட்டவர், கைவிடப்பட்டவர், நோய்வாய்ப்பட்டவர்கள் என ஒரு நாட்டிலுள்ள எல்லாத் தரப்பினரின் பசியையும் தீர்க்க முற்படுகிறது.

ஏன்..

வள்ளுவனும் கூட ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்று பேசுகிறபோது,

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு”**

என்று தானே பேசுகிறான். இங்கு தான் எனக்கு ஒரு சந்தேகம். ஏன் வள்ளுவன் பசியை முதலாவதாக வைக்கிறான்? பிணியை சொல்லியிருக்கலாம். பகையைச் சொல்லி இருக்கலாம்.. பசியை பட்டியலில் முதலில் வைக்க காரணம் என்ன?

இந்த கேள்விகளுக்கு மணிமேகலை தான் சரியான பதிலைத் தருகிறது. ஒரு நாட்டில் பகையால் ஏற்படும் போர் என்பது எப்போதாவது தான் நிகழும், பிணி வந்தால் கூட மருந்து கொடுத்து சரி செய்யலாம். அப்படியே இழப்பு வந்தாலும் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக தான் நிகழும். ஆனால், பசி வந்தால் என்ன செய்யும் தெரியுமா?

**“குடிப்பிறப்பு அழிக்கும், விழுப்பம் கொல்லும்,**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,**
**நாண் அணிகளையும் மாண் எழில் சிதைக்கும்**
**பூ ண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி”**

தன் குலப் பெருமையைக் அழித்துவிடும், மேன்மையை கொன்றுவிடும், கல்வியினால் பெற்ற அறிவை போக்கிவிடும், மானத்தை, அழகை என்று எல்லாவற்றையும் அழித்துவிடும் அது மட்டுமல்ல, தன் மனைவியோடு மாற்றான் வீட்டு வாசலில் கையேந்தச் செய்துவிடும் பசி என்னும் பாவி என்கிறது மணிமேகலை.

ஒரு நாடே அந்த பசியின் பிடியில் சிக்கினால் எப்படி இருக்கும்? அந்த காட்சியை சற்று நினைத்துப் பாருங்கள். ஒரு நாடே கையேந்தினால் அது நாடா? எனவேதான் வள்ளுவன் பசியை முதலாவதாக வைக்கிறான் என்று உணர்த்துகிற மணிமேகலை மேலும் வள்ளுவன் பாணியிலேயே,

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க”**
என்று வள்ளுவத்தை வழிமொழிகிறது.

இப்படி ஓரிடத்திலல்ல, பார்க்கும் இடமெல்லாம் வள்ளுவத்தின் கரம் பற்றி வள்ளுவ மேகலையாய் உருவெடுக்கிறாள் மணிமேகலை.




என்ன தான் பல அரிய கருத்துக்கள் பொதிந்திருந்தாலும் கூட மணிமேகலை என்னவோ தமிழர்களால் புறக்கணிக்கப்படுகிற காப்பியம் தான். மதத்தின் பெயரால் திட்டமிட்டு அனலிலும், புனலிலும் இட்டு அழிக்கப்படுவது மட்டும் அழிப்பு அல்ல ஒரு நூல் வாசிக்க படாமல் ஒதுக்கப்படுவதும் ஒரு வகை அழிப்பு தான்.

என்ன சொல்லி என்ன நாம் மணிமேகலையை படிக்கவா போகிறோம்.?



## தமிழன்னையை அலங்கரிக்கும்.......

**ஐம்பெருங்காப்பியங்கள்**

சிலப்பதிகாரம்
மணிமேகலை
குண்டலகேசி
வளையாபதி
சீவக சிந்தாமணி

**ஐஞ்சிறுகாப்பியங்கள்**

உதயணகுமார காவியம்
நாககுமார காவியம்
யசோதர காவியம்
சூளாமணி
நீலகேசி

## பங்குச் சந்தையில் புதிதாக உள்நுழைதல்

தனி நபரொருவர் பங்குசந்தையில் உட்பிரவேசித்து கம்பெனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்புவாராயின் அவர் முதலில் பங்குதரகர் நிறுவனம் ஒன்றை தொடர்புகொண்டு மத்திய வைப்புத் திட்ட கணக்கொன்றை (CDS Account) ஆரம்பித்தல் வேண்டும். இங்கு குறித்த கணக்கை எந்தஒரு தரகரிடமும் இலவசமாக ஆரம்பித்துக் கொள்ளமுடியும். இவ்வாறான கணக்கை ஆரம்பித்ததன் பின்னரே பங்குகளை கொள்வனவு செய்யவோ விற்பனை செய்யவோ முடியும்.




### பங்குதரகர் நிறுவனங்கள் –Stock Broking Firms

வாடிக்கையாளர்களுக்கு /முதலீட்டாளர்களுக்கு பங்குசந்தை தொடர்பான தகவல்களையும் முதலீட்டுக்கான ஆலோசனை (Investment Advising) செயற்பாடுகளை மேற்கொள்வதுமான செயற்பாட்டை மேற்கொள்ளும் நிறுவனங்களே இவ் நிறுவனங்களாகும் . இவர்கள் பங்குகளின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பிலான தரகு வருமானங்களை(Commission Income) வருமானமாகப் பெற்றுக்கொள்வர் .

### பங்குசந்தையில் வியாபாரப்பொறிமுறை

பங்குச்சந்தை ஒன்றில் ஏனைய சந்தைகளைப் போன்றே விற்பனையாளர்களும்



கொள்வனவாளர்களும் ஒன்று கூடி தமது சந்தை செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். எனினும் இங்கு இவர்கள் நேருக்கு நேர் சந்திப்பதும் இல்லை . யார் விற்பனையாளர் மற்றும் யார் கொள்வனவாளர் எனவும் தெரிந்து கொள்ளப் போவதுமில்லை.இங்கு குறித்த செயற்பாடுகள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டதாகவே இடம்பெறும். இங்கு பங்குகளை விற்பனை செய்யவிருப்புபவர் ஒருவர் தனது பங்குகளை தான் எதிர்பார்க்கும் விலைக்கு விற்பனை செய்வதற்கான கட்டளை ஒன்றை பிறப்பிப்பார்.இங்கு ஏற்கெனவே குறித்த விலைக்கு வாங்குவதற்காக கொள்வனவாளர் ஒருவர் தயாராக இருப்பாராயின் உடனடியாகவே குறித்த கொடுக்கல் வாங்கல் உடனடியாகவே பூர்த்தி செய்யப்படும். இதில் உடன்பாடு எட்டப்படும் வரை விற்பவரது கட்டளையாக இருப்பினும் வாங்குபவரது கட்டளையாக இருப்பினும் அது பூர்த்தியாகாமல் Pending Order ஆகவே காணப்படும்.

### பங்குப்பரிவர்த்தனை தொடர்பிலான செலவினங்கள்.

பங்குகளை கொள்வனவு/ விற்பனைசெயற்பாடுகளில் ஈடுபடும் போது குறித்த கொடுக்கல் வாங்கல் தொகையின் 1.12 சதவீதமானது கட்டணமாக அறவிடப்படும். உதாரணமாக 10,000 ரூபாவிற்கு விற்பனை/ கொள்வனவு நடவடிக்கை ஒன்றை மேற்கொள் ளுவோமாயின் அதன் 1.12% ஆகிய 112 ரூபா கட்டணமாக அறவீடு செய்யப்படும். இக் கட்டணமானது பின்வரும் வழிமுறையிலேயே அறவீடு செய்யப்படுகின்றது.

பங்குசந்தை என்பது மிக சாதாரணமான முதலீட்டு வழியொன்று என்பதைப் பலரும் விளங்கிக்கொள்வதில்லை.எனவே குறித்த விடயம் தொடர்பான மிக இலகுபடுத்தப்பட்ட தொகுப்பு ஒன்றை தொடராக எழுத தீர்மானித்துள்ளேன். இங்கு பதிவிடப்பட்ட விடயப்பரப்பினுள் ஏற்படும் கேள்விகளை /சந்தேகங்களை thumi2016@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் . அனுப்பப்படும் வினாக்களுக்கான பதில் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

K.ஹிருபிகன்
Accounting & Business, Dip.in HRM , ACCA-UK (Reading), BBM (Reading)

| Transactions up to LKR 100mn – 1.12% | |
|---|---|
| Brokerage Fees | 0.640% |
| CSE Fees | 0.084% |
| CDS Fees | 0.024% |
| SEC Cess | 0.072% |
| Share Transaction Levy | 0.300% |
| Total transaction cost | 1.120% |

## உரிமை வழங்கல் Rights issue

கம்பெனிகள் தமது பங்குதாரர்களுக்கு நன்மையளிப்பதற்காகவும் ஏற்கெனவே உள்ள மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்திற்காகவும் சந்தை விலையை விடவும் குறைவான விலையில் பங்குகளை வழங்குதல் உரிமை வழங்கல் ஆகும்.இங்கு குறித்த உரிமை வழங்கல் ஊடாக குறைந்த விலையில் பெற்றுக்கொண்ட பங்குகளை சந்தையில் நிலவும் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்வதன் மூலமாக பங்குதாரர்கள் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும்.



வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற சில ஐயப்பாடுகளும் அதற்கான விளக்கங்களையும் இனி பார்ப்போம்.

கேள்வி:- குறித்த கம்பனி முடக்கப்பட்டால் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளிற்கு மத்தியவங்கி பொறுப்பேற்குமா?

பதில்:- மத்திய வங்கியானது வங்கிகள் தொடர்பான செயற்பாட்டு பொறிமுறைகளையே கண்காணிப்பு செய்கின்றது. மேலும் கம்பனி ஒன்று நட்டமடையுமாயின் குறித்த நட்டம் முற்றிலுமாக பங்குதாரர்களையே சாரும்.எனினும் இவ்வாறான நிலைமைகளின் கீழான பொறுப்புத்தீர்த்தல் பொறிமுறையை நீதிமன்றமே தீர்மானிக்கும்.

கேள்வி:- பங்கு ஒன்றை ஒருவர் கொள்வனவு செய்ய இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?

பதில்:- இலங்கைப்பிரஜை ஒருவராக இருப்பின் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், இலங்கையின் தேசிய அடையாள அட்டை/செல்லுபடியான கடவுச்சீட்டை வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக தனது வதிவிட முகவரியை உறுதிப்படுத்துதலும் அவசியமாகும்.

கேள்வி :- நிதி நிறுவனம் பங்குதாரருக்கு பங்குலாபம் தர மறுத்தால் நீதி கோரலாமா?

பதில்:- பங்குலாபம் என்பது பங்குதாரர்களின் ஒப்புதலுடனேயே வழங்கப்படும். எனவே பங்குலாபமானது வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்தை பங்குதாரர்களே மேற்கொள்கின்றர். இவ்வாறான ஒப்புதலுடன் வழங்கப்படும் பங்குலாபமானது எவ்வித குறையுமின்றி சகல பங்குதாரர்களுக்கும் வழங்கப்படும்.

கேள்வி :- என்னால் வெளி நாட்டு நிறுவனங்களின் பங்குகளை கொள்வனவு செய்ய முடியுமா?

பதில் :- ஆம், எனினும் குறித்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைவாகவும் குறித்த நாட்டின் பங்குச்சந்தையில் பிரவேசித்து கொள்வனவு செய்யமுடியும். இலங்கையின் பங்குச்சந்தையில் வெளிநாட்டவர்களும் முதலீடு செய்ய முடியும்.

தொடரும்...



ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

3

இது ஆதவனின் தகனம்!

அழகிய சோலைகளும்,
தாமரைத் தடாகங்களும்
விகாரைகளும்
கோட்டைகளும்
நிறைந்திருந்த அனுராதபுர
நகரம் அளவுகடந்த
அமைதியைத் தன் மேல்
போர்த்தியிருந்தது!
நேற்றைய நாளின் பரபரப்பு ஓய்ந்து, அது அனுதாப
அலையை அனுராதபுரம் எங்கும் வீசி அடங்கியிருந்தது!

'முதலமைச்சர் கொல்லப்பட்டார்!" என்ற செய்தி நாடு முழுவதும் பரவியதால், குழப்பத்தின் குறிகளோடு, மக்களின் முகங்கள் விரிந்து போயிருந்தன...

அனுராதபுரத்தின் அரச மாளிகை! நான்கு புறமும் ஒரு பனைமர உயரத்திற்கு எழுப்பப்பட்ட மதில் சுவர்! சுற்றி ஆறு கொத்தளங்கள்! கொத்தளங்கள் எங்கும் அம்பும் வில்லும் ஏந்திய சிங்கள வீரர்கள்!
கோட்டையைச் சுற்றி அகழி!

சங்கிலிகள் தளர்த்தப்பட்டு அகழி மேல்
பெரிய மரக் கதவுகள்
வளர்த்தப்பட்டன இன்று
கோட்டைக்குள் இருந்த
அரண்மனையின் விருந்தினர்
மண்டபத்தில் மரணச் சடங்கு...

தேசத்தின் பல சிற்றரசர்களும்,
அறிஞர்களும், வணிகர்களும்
கூடியிருந்தனர்.

திடீரென காவலர்கள் வந்து
இருபுறமும் நிற்க,
அரச அணிகலன்கள் ஏதுமின்றி
மன்னர் தாதுசேனன் என்றும்
கலங்காத தன் கண்களில் நீர்
வடிய தன் வெள்ளை தாடியை
தடவியபடி வந்தார்...

அழுதார்...


உணர்வு மேலிட்டு வார்த்தைகள்
வெளிப்பட்டன....
'ஆரிய சேனா....! என் இனிய
தோழா...! உன்னை இந்த நிலைக்கு
ஆளாக்கியது யாரடா...?
கண்களைத் திறந்து பார்!
நாட்டுக்காக... உன் சேவைக்காக...
மணமுடிக்காமல் வாழ்ந்தாயே...
நேற்று ஆலோசனை சபை
முடிந்ததும் அளவளாவி
சென்றாயே... என்
நண்பனை இனி எங்கு
காண்பேன்?"

மன்னனோடு அனைவரும்
கலங்கிவிட்டனர்...

அறிஞர்களும்,
அமைச்சர்களும், தம்
இரங்கல் உரைகளைக்
கலங்கியபடியே கூறி முடித்தனர்!

கோண நதிக் கரையோரம், ஆரியசேனரின் உடலம், கொண்டு வரப்பட்ட போது மாலையாகிவிட்டது!
நதிமுகப்பு எங்கும் வீரர்களும் மக்களும் வரிசையாய் நின்றனர்.
மன்னர் தனது கைகளினாலேயே தீயிட்டார்! சடங்குகள் நிறைவடைந்து, தாதுசேனர், நதியில் மூழ்கி எழுந்து அரண்மனை அடைந்தபோது சந்திரன் உதயமாகி விட்டான்!

சந்திரனை கருமேகங்கள் மறைப்பதும்,
காற்று இரைந்து வீசுவதும், தூரத்தே மின்னல்



வானத்தில் நிகழ்ந்த இந்த நிகழ்வுகள் எல்லாம் தாதுசேனரின் மனதிலும் நிகழ்ந்திருக்க வேண்டும்!
அமைதியோ, உறக்கமோ இன்றி, அரண்மனை மேல் கொத்தளத்தில் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தார்...
சிலவேளைகளில் வானத்தைப் பார்ப்பதும் பின்பு தன்னை சுதாகரித்துக் கொள்வதுமாக இருந்தது அவருடைய நிலைப்பாடு!

திடீரென தன்னை யாரோ அவதானிப்பது போன்ற ஒரு உணர்வால் உந்தப்பட்டு, கொத்தளத்தின் படிவரிசையை எட்டிப்பார்த்தார்...

குழப்பமான் மன நிலையில் இருந்த அவருக்கு, இருளில் திரைச்சீலையின் பின்னே தன்னை மறைத்துக்கொண்ட அந்தக்கறுப்பு உருவத்தைக் கண்டுகொள்வதற்கான தெளிவு ஏறிவந்து நிற்கவும் நேரம் சரியாகவிருந்தது!

கைகட்டி நின்றார்களில் ஒருவன் பேசினான்!
"மன்னா...ஒற்றர்கள் வந்தாகிவிட்டது தங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறார்கள்!"
"வரச்சொல்"

ஒற்றர்கள் வந்து வணங்கி நிற்கிறார்கள்.
தலைமை ஒற்றன் ஆமந்தநாகன், பேசத்தொடங்கினான்!
"மன்னா இன்று இந்த நகரின் ஆதவனே தகனம் செய்யப்பட்டு விட்டான்..."
"ஆம் உண்மைதான் ஆதவனுக்கு ஒப்பான என் நண்பன் அவனை கொன்றவனை அறிந்து விட்டீர்களா?.....என் உயிருக்கு நிகரானவனின் உயிரழித்தவன் யார்?"
"மன்னா அது....அது...."
"என்னை மேலும் கலக்கத்திற்கு உள்ளாக்க வேண்டாம் யாராக இருந்தாலும் என் கரங்களை அவன் சிரம் கொய்யப்படும்!"
"தங்கள் மகன் காசியப்பர் தான் இறுதியாக மாளிகைக்குள் நுழைந்த தகவல் கிடைத்துள்ளது..."



அருகில் இருந்த ஆசனத்தை பற்றிப் பிடித்துக் கொண்டார் மன்னர்!

காற்றின் ஓசையைக் கிழித்துக்கொண்டிருந்த தூரத்து முழக்கத்தின் சத்தத்தைத் தவிர வேறு அரவமில்லை!

"புரிகிறது நாகா, ஆட்சி அதிகாரத்தை முகலனுக்கு வழங்குவதாக சபையில் முடிவெடுக்கப்பட்டது... அதை ஆமோதித்து ஆதரவு வழங்கிய என் நண்பனை ஆத்திரம் கொண்டு கொன்றுவிட்டான் கொடியவன்..."
நீண்ட அமைதியை தன் கோவச்சொற்களால் கொன்றுபோட்டார் மன்னர்!

"நாகா... அவன் இப்போதிலிருந்து இளவரசன் என்ற தகுதியை இழக்கின்றான்! இந்த நாட்டின் குடிமகன் என்ற தகுதியையும் தான்! அந்த குற்றவாளியை கொன்றோ, உயிருடனோ கொண்டுவா! கோடி பொன் தருகிறேன்..... செல்!!"

ஒற்றர்கள் வணங்கியபடியே படிகளாலிறங்கிப் போயினர்...

அந்தக்கரிய உருவமும் தான்!

திகில் தொடரும்....

# உலகின் ஓசை அடங்கும் போது...

பால்வெளியின் அரசன் அவன். அங்கே அவனின்றி ஒரு அணுவும் அசையாது. அவன் செல்லத் தீண்டலுக்காய் தேவலோகத்திலே ஆயிரம் ஆடல் மங்கையர் காத்துக் கிடக்கின்றனர். இந்திர அவையின் புலவர்களும் உம்பர் தோட்டத்து கவிக்குயில்களும் இவனை பாட தவம் செய்கிறார்கள். தேவர்களில் அவன் நடை, உடை, வேகம், கோபம், மிடுக்கு, வீரம், வாஞ்சை கண்டு மயங்காதவரில்லை.

**இவனுக்கு எத்தனை பெயர்கள்?**
ஞாயிறு, வெய்யோன், செங்கதிரோன், ஆதித்யன், உதயன், சௌரன், தினகரன், பிரபாகரன்.

ஏழு மிடுக்கான குதிரைகள் பூட்டிய தேர். அந்த ரதத்திலே வானவெளியெங்கும் வலம் வருவான் மித்திரன். ஓர் உலாவின் போது நீலச்சேலை கட்டிய ஒரு மங்கையை கண்டான். கண்டதும் காதல்.




"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

சிந்தைக்குள் குறுந்தொகை பொறி தட்டியது. யார் என்றே தெரியாது மையல் கொண்ட தையலுக்கு பக்கமாய் செல்ல கொஞ்சம் தயக்கம். குறுந்தொகையை துணையாக்கி பாடுகிறான்.



"யாயும் யாயும்
யார் ஆகியரோ
நெஞ்சு நேர்ந்தது
என்ன?
யானும் நீயும்
எவ்வழி அறிதும்
உறவு சேர்ந்தது
என்ன?"

எனது அம்மாவும் உனது அம்மாவும் முன்னரே நண்பர்களா? எனது தந்தையும் உனது தந்தையும் எந்த வழியில் உறவினர்கள்? நானும் நீயும் இதற்கு முதல் சந்தித்ததே இல்லையே! ஆனாலும் உனை பார்த்த இந்த நொடியிலே, செம்பாட்டு மண்ணில் மழைத்தண்ணீர் கலந்தவுடன் நீரும் மண்ணும் பிரிக்கமுடியாது சகதியாவது போல, என்னுடைய மனது உன்னுடன் கலந்துவிட்டதே! அதிசயம்.

இந்த அஞ்சுமாலிக்கு மையல் தூது விட்ட அந்த மயில் யார்?



அவள் பூமாதேவியின் மகள். வருணன் சிந்திய முத்து மழையை முத்தமிட்டு முத்தமிட்டு தாய்மை பேறு பெற்றவள் பூமாதேவி. இப்படியாக பூமிக்கும் வருணனுக்கும் பிறந்த ஒரே மகள் தான் இப்பொழுது சுடரவனை ஈர்த்துக்கொண்ட சமுத்திரக் கன்னி.

வருணன் இந்திரனவையில் இவனோடு கூடித்திரியும் உற்றதோழன். மழைக்கடவுள். பூமி இவனது சாம்ராஜ்யத்தில் வாழும் பெண். இவர்களின் மகள் மேல் காதல். ஆக, அவளது தாய் தந்தையை இவனுக்கு நன்றே தெரியும். ரொம்பவே தர்ம சங்கடமான நிலை, பெற்றோருடன் கூடி பழகிக்கொண்டு பெண்ணை காதலிப்பது.

சமுத்திரக்கன்னியோ வைரோசனனை முன்னரே அறிவாள். பால்வெளியின் அரசனை அறியாமலா! அவன் மேல் காதல் கொண்ட பல கோடி பெண்களைப்போல, இவளும் அவன் பேராண்மையை காதலிக்கிறாள். ஆனால் இப்பொழுது, அண்டசராசரத்தையும் கட்டியாளும் வானவனே தன்னை காதலிக்கிறான் என்பதை அறிந்து அவளுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. ஆனாலும் தன் காதலை அவள் வாய் திறந்து திவாகரனிடம் சொல்லவுமில்லை. காதலை வெளிப்படுத்த வெட்கம் தடுக்கிறது.

'காதல் வந்ததும் கன்னியின் உள்ளம்
காதலை யாருக்கும் சொல்வதில்லை
புத்தகம் மூடிய மயிலிறகாக
புத்தியில் மறைப்பாள் தெரிவதில்லை'

கொஞ்சிக் கொஞ்சி பேசும் அவளது அலைகளில், தன்னைக் கண்டு வெட்கத்தில் சிவந்து விடும் அவள் வதனத்திலென, ஜாடைகளை புரிந்துகொண்டு அவளுக்கும் தன் மேல் இஷ்டமென்று கண்டுகொண்டான் இளம்பரிதி. ஆனாலும் அவள் திருவாய் மலர்ந்தால் தான் அது உறுதியாகும்.

"நறுமுகையே
நறுமுகையே
நீயொரு
நாழிகை
நில்லாய்"



பூவுக்கு ஒன்பது பருவ நிலைகள் இருக்கிறது. அதில் மொட்டு வெடிக்க ஆரம்பிக்கும் நிலை முகை. பெண்ணிலும் பருவ நிலைகள்



இருக்கிறது. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழு பருவநிலைகள் இருக்கிறது. இதிலே அவள் பூப்படைய ஆரம்பிக்கும் நிலை மங்கை. பதினொரு வயதிலிருந்து பதின்நான்கு வயது வரை உள்ள காலப்பகுதி. இங்கே மங்கையாகியவள், பூக்களின் பருவத்திலே முகைக்கு ஒப்பானவள். தன் இதயத்தை கொள்ளையிட்ட காதலியை 'வாசமுள்ள மங்கையே' என்று விழிக்கிறான் ஆதவன்.

'சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசமுண்டு
கண்டதுண்டா கண்டவர்கள் சொன்னதுண்டா'

முகையே! மங்கையே! ஒரு நாழிகை நில்லேன் உன்னிடம் பேச வேண்டும். அவளது கணக்கில் ஒரு நாழிகை என்றால் 'இருபத்தினான்கு நிமிடம்'. ஒரு நாழிகை அறுபது விநாழிகைகள் சேர்ந்தது. 2.5 நாழிகைகள் சேர்ந்து ஒரு ஓரை. ஒரு ஓரை என்றால் ஒரு மணித்தியாலம். அறுபது நாழிகைகள் சேர்ந்து ஒரு நாள்.

"செங்கனி ஊறிய வாய் திறந்து
நீயொரு திருமொழி சொல்லாய்"

தேன் சிந்தும் வார்த்தைகளால் 'சம்மதம்' என்று சொல்லேன்! இந்த இதழ்களில் ஊறிய செங்கனி எது?

"செம்மாதுளை வாய்மொழி சொல்லாயோ"

"அற்றைத் திங்கள் அந்நிலவில்
நெற்றித் தரள நீர் வடிய
கொற்றப் பொய்கை ஆடியவள் நீயா?"

அந்த மாதத்தில் ஒரு கனவு. நிலவினிலே ஒரு அரண்மனைக் குளம் இருக்கிறது. தாமரையும் அல்லியும் கொட்டப்பட்ட குளம். அன்னப்பட்சிகளும் நீந்துகிறது. அந்த குளத்திலே மூழ்கி குளித்த பெண்ணொருத்தி நீரிலிருந்து மேலே மெதுவாக எழுகிறாள். கூந்தல் கட்டு மினுங்குகிறது. நெற்றி வழியே நீர் முத்து முத்தாக வழிகிறது. இமை தெரிகிறது. கண்ணை பார்க்க முன்னரே கனவு கலைந்து விட்டதே! அன்று கனாவிலே வந்த சுந்தரி நீ தானா?

"திருமகனே திருமகனே
நீ ஒரு நாழிகை பாராய்
வெண்ணிறப் புரவியில் வந்தவனே
வேல்விழி மொழிகள் கேளாய்
அற்றைத் திங்கள் அந்நிலவில்
கொற்றப் பொய்கை ஆடுகையில்
ஒற்றைப் பார்வை பார்த்தவனும் ~ நீயா?"

ஆதவனே! நான் விரும்பும் ஆண்மகனே! இங்கே ஒரு நாழிகை பார்! வேலெறியும் என் கூர் விழிகள் பேசுவதை கேள்! என்னுடைய சொப்பனத்திலும் நீ சொன்னது போலவே நான் நீராடிக்கொண்டிருந்த அந்த பொழுதில், நான் நீரிலிருந்து மெலெழும் பொழுது வெள்ளை நிற குதிரையில் வந்த யாரோ ஒரு இளைஞன் நான் குளிப்பதை பார்ப்பதாக உணர்ந்தேனே! அதனால் தான் நான் மறுபடியும் நீருக்குள் மூழ்கினேன். அன்று புரவியில் வந்தது, இரவி நீ தானா?

"மங்கை மான்விழி அம்புகள்
என் மார் துளைத்தது என்ன"

பாமனின் கேள்விகளுக்கு இவள் கண்களினாலேயே பதில் சொல்கிறாள். காதல் மொழி பேசிய அவளது கூரான கண்கள், இவன் நெஞ்சில் காதல் கணைகளால் தைக்கிறது. சிறிய வலி.

'கண்ணே என் கண் பட்ட காயம்
கை வைக்க தானாக ஆறும்'

"பாண்டி நாடனைக் கண்டு என்
உடல் பசலை கொண்டது என்ன"

காதல் நோய் பீடித்தால் பசியின்மை, தூக்கமின்மை, காணும் பொருளிலெல்லாம் காதலர் முகம், நேரத்தின் நீட்சி, இதயத்துடிப்பு அதிகரிப்பு என பல அறிகுறிகள் தென்படும். இது ஆண், பெண் இருவருக்குமே பொதுவானது. ஆனால்





'பசலை' என்பது பெண்களுக்கு மட்டுமே தனித்துவமான காதல் நோய். தோலில் ஒரு வித நிற மாற்றம் உண்டாகும். பெரும்பாலும் பொன்னிறமாக மாறி இருக்கும். முகத்திலே நாண அலைகள் ஆர்ப்பரிக்கும். உடலெங்கும் ஒரு வித பூரிப்பு. சிலிர்ப்பு.

"இளைத்தேன் துடித்தேன் பொறுக்கவில்லை
இடையினில் மேகலை இறுக்கவில்லை"

காதல் நோயினால், அவள் தினம் தினம் காதலனை எண்ணி எண்ணி துடிக்கிறாள். எப்பொழுது காணுவேன் என ஏங்குகிறாள். உணவை விடுத்து உடல் மெலிந்து இடை சுருங்கி போகிறாள். இந்நிலையில், அவள் இடையிலே அணியும் ஒட்டியாணம் போன்ற ஒரு தங்க ஆபரணம் 'மேகலை' யும் நழுவுகிறது. இடை மெலிந்து விட்டதால் இறுக்கவில்லை.

"ஒரே ஒரு தீண்டல் செய்தாய்
உயிர்க்கொடி பூத்தது என்ன!
செம்புலம் சேர்ந்த நீர்த்துளி போல்
அன்புடை நெஞ்சம் கலந்தது என்ன"

இவளுடன் இப்படி காதல் மொழி பேசிப் பேசியே தாமரை நாயகன் இவளை நெருங்கிவிட்டான். தினமும் காதல்ப் பேச்சு. ஆயிரம் கரங்கள் நீட்டி தினம் தினம் அணைக்கும் காதலனிடம் சமுத்திராவிற்கு பூரண நம்பிக்கை பிறந்து விட்டது. பல யுகங்களாய் காதல் பாடம் பயின்ற பின், இவள் தன்னை திறந்து காதலனுக்கு விருந்தளிக்க தயாராகிறாள்.



'தலைமுதல்
கால்வரை
தவிக்கின்ற தூரத்தை
இதழ்களில்
கடந்துவிடு
உன் மீசையின்
முடியென்ற
மெல்லிய சாவியில்
புலன்களைத்
திறந்துவிடு'

சங்கீதம் பாடும் சமுத்திராவுடன் பகலெல்லாம் கூடுகிறான் சூரியன். சமுத்திராவின் மேல் இருந்த காதல் ஆசை இப்பொழுது காமமாகி கரைபுரண்டு ஓடுகிறது. அவளின் அங்கம் எங்கும் இவனது பொன்கரங்கள் மேய்கிறது. மேடு பள்ளம் தெளிவு வளைவுகளில் ஆராய்ச்சி தொடர்கிறது. உடல் முழுவதும் முத்தமிட்டு முத்தமிட்டு அவளை பல தடவைகள் உச்சம் காண வைக்கிறான் உதயாதித்தன்.

"உன் கட்டுக்கூந்தல் காட்டில்
நுழையாமல் போவேனோ
அதில் கள்ளத்தேனை கொஞ்சம்
பருகாமல் போவேனோ"

சமுத்திராவின் மீது பகலவன் மொத்த வித்தையும் இறங்க இறங்க, அவளினுள் இரசாயன மாற்றங்கள் ஆரம்பிக்கிறது. இந்த இரசாயன சேர்க்கையினால், சமுத்திராவினுள் தூங்கிக்கிடந்த சிறுநரம்புகளில் எல்லாம் மின்சாரம் பாய்கிறது. காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் மூலகங்கள் சேர்ந்து 'ஆதி உயிர்ச்சேறு' உருவாகிறது. சமுத்திரா சினை பிடித்தாள். அது உயிராக மாறியது. அந்த முதல் உயிருக்கு 'பக்றீரியா' என்று பெயர்.



தாய்மை அடைந்த சமுத்திரா மீது துலாதரனுக்கோ இன்னும் காதல் கூடியது. தொடர் கூடல். மேலும் மேலும் பிள்ளைகளை சமுத்திரா பெற்றுக்கொண்டேயிருந்தாள். சிலரை மட்டும் தன்னோடு வைத்துக் கொண்டு, மற்றைய பிள்ளைகளை தன் தாய் பூமாதேவியிடம் வளர்ப்பதற்கு கொடுத்துவிட்டாள்.

பூமாதேவி வளர்த்த பிள்ளைகளில் ஒருவன் இப்படி எழுதினான்,

"நறுமுகையே நறுமுகையே
நீயொரு நாழிகை நில்லாய்
செங்கனி ஊறிய வாய் திறந்து
நீ ஒரு திருமொழி சொல்லாய்."

இ.தனிஷ்ரன்




N.ஹரிசாந்

# ஈழத்தின் சித்த மருத்துவம்
## வரலாறு - 02

இலங்கையில் சித்தமருத்துவம் வடகிழக்கு பகுதிகளில் பண்டு தொட்டு பரம்பரை பரம்பரையாக செய்யப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் 5 வருட கற்கை நெறியாகவும் கிழக்கு மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகின்றன. சித்தமருத்துவம் பற்றி இலங்கைக்குரிய பல நூல்கள் கூறுகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்த பல சித்தமருத்துவ ஏட்டுச்சுவடிகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. அவற்றில் செகராஜசேகரம், பரராஜசேகரம், இருபாலைச்செட்டியார் வைத்திய விளக்கம், அமுதாகரம், சொக்கநாதர் தன்வந்திரியம், சுதேசவைத்திய அவுடததிரட்டு என பல நூல்கள் அடங்கும்.
இதில் அங்காதிபாதம் (பரராஜசேகரம்) எனும் நூல் சென்ம உற்பத்தி (கரு உற்பத்தி) பற்றி சிறப்பாக எடுத்துரைக்கின்றது.
அங்காதிபாதம் எனும் நூல் பிரிவு பரராஜசேகர நூல் தொகுப்புகளில் உள்ளது. இதே போல் இந்தியாவில் உள்ள சித்தமருத்துவ நூல் வெளியீட்டு குழுவினாலும் அங்காதி பாதம் எனும் பெயரில் புத்தகம் ஒன்றினை 1976ஆம் ஆண்டு வெளியிட்டனர். இவ்இரண்டு புத்தகங்களிலும் சென்ம உற்பத்தி (கரு உற்பத்தி) பற்றிய பாடல்கள் ஒன்றாகவே உள்ளன.

இலங்கையில் சித்தமருத்துவத்தில் வடக்கில் பல நூல்கள் எழுந்த போதும் கிழக்கில் அவ்வாறான பெயர் பெற்ற சித்தமருத்துவ நூல்கள் ஏன் எழவில்லை என்ற கேள்வி எழுகிறது. சித்தமருத்துவத்தில் மணி மந்திர ஔடதம் எனும் மூன்று பிரிவுகளையும் மிகச் சிறப்பாக பயன்படுத்தியவர்கள் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் இப்போதும் பல பரம்பரை மருத்துவர்கள் மந்திரம் தெரிந்தவர்களாக இருப்பதும் கண்கூடு. இவ்வாறு இருக்கையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏட்டுச்சுவடிகள் பல நூல் வடிவம் பெறாதது கவலைக்குரிய விடயமே. அந்த வகையில் மட்டக்களப்பு நொச்சிமுனையை சேர்ந்த வைத்தியர் கந்தப்பன் விநாயகமூர்த்தி அவர்கள் அளித்துள்ள அங்காதி பாதம் எனும் நூல் கிழக்கிற்கு ஒரு விடி வெள்ளி என்றே கூறவேண்டும். ஏட்டுச்சுவடியில் இருந்தவற்றை பொருள் விளக்கத்துடன் தனது 96வது வயதினில் நூல் வடிவாக்கியுள்ளார். அந்த வகையில் இவ் அங்காதிபாதம் எனும் நூலில் கூறப்பட்டுள்ள சென்ம உற்பத்தி பாடல் வரிகள் பரராஜசேகரத்தில் உள்ள பாடல் வரிகளிலும் பார்க் மிக இலகுவாக விளங்கக்கூடிய வகையிலும் சந்தத்துடன் கூறப்பட்டுள்ளது. ஒரு பாட்டின் கடைசி சொல் அடுத்த பாட்டின் முதல் சொல்லாக வரும் வண்ணம் மிக நேர்த்தியாக பாடலாக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இப் பாடல்களை ஏட்டுச்சுவடியில் எழுதிய சித்தர் யார் என்பது

இப்போது பாடல் வரிகளினை பார்ப்போம்,

“ஓதுமிக் கருவி தொண்ணூற்றாறென வுரைத்தார் மேலோர்
தீதிலா மாந்தர் சென்ம
வுற்பத்தி செப்பக்
கேண்மின்
தாதையுந் தாயுங்
கூடித் தழுவிய
போகந் தன்னில்
ஆதியாம் விந்திறங்கிச்
சுரோனிதத் தடங்கு மன்றே..”
-பரராஜசேகரம்-

“முறையிது வாகச்சென்ம முதித்திடு முறைமை கேளீர்
இறையவ னருளினாலே தாயோடு தந்தை கூடி
நிறைவுறு போகம் தன்னில் நீங்கிய சுக்கிலந்தான்
அறுகு னுண்னுனிப் பனிபோல் சுரோனிதப்பைக்குளாமே”

பொருள் - மனிதப்பிறவி உண்டாகின்ற விதத்தைக் கேட்பாயானால் தாயோடு தந்தை கூடி அனுபவிக்கின்ற இன்பத்தின் விளைவாக வெளிப்படுகின்ற இந்திரியமானது சிறிதளவு கருப்பைக்குள் போகுமென்பதாகும்.

இவ்வாறு கரு உற்பத்தி பற்றி இரு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்காதிபாதம் எனும் நூல் சித்த மருத்துவம் கற்பவர்களுக்கு அடிப்படை அறிவினை மிகச் சிறப்பாக வழங்குகின்றது.

இவ்வாறான புத்தகங்களை படிப்பதற்கு சிறப்பான தமிழ் புலமையும் வேண்டும் என்பது இன்றியமையாதது.

இன்றும் கிழக்கில் பல பரம்பரை வைத்தியர்களிடம் பல ஏட்டுச்சுவடிகள் இன்னும் நூல் வடிவம் பெறாமல் உள்ளது அவற்றை எல்லாம் அழிந்து போக விடாமல் நூல் வடிவம் கொடுத்து பாதுகாப்பது காலத்தின் கட்டாயம் ஆகும்.

இந்தியாவில் பழமையான ஏட்டுச்சுவடிகள் மற்றும் பல அரிய நூல்கள் தஞ்சையை ஆண்ட சரபோஜி எனும் மன்னரின் பெரும் முயற்சியால் சரசுவதி மகால் நூல் நிலையம் அமைக்கப்பட்டு பல ஏட்டுச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு நூல் வடிவம் பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கோடீஸ்வரனின்

கடந்த இதழ்களில் விதியினால் மாண்ட அசுரனைப் பற்றியும், விதியினை வென்ற வீரனைப் பற்றியும் எழுதியிருந்தேன். இன்று சற்று மாறுதலாக தமிழர்களாகிய எமது தலைவிதியினை மாற்ற அடித்தளம் இட்டுக்கொடுத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழக்கினைப்பற்றி ஆராய்வோம். தலைப்பை பார்த்தவுடன் யார் அந்த கோடிஸ்வரன்? அவர் என்ன அவ்வளவு பெரிய பணக்காரனா? சொத்துக்குவிப்பு வழக்கு எதுவுமா ? என்று பல கேள்விகள் உங்களுக்குள் தற்போது எழுந்துக்கொண்டிருக்கும் அந்தக் கேள்விக்கணைகளுடன் சுமார் 58 வருடங்கள் பின்னோக்கி நகர்வோம்.

1962 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வழமை போல பனி போர்த்தி உறங்கிக் கிடந்த இரவை சூரியன் எழுப்பி விடுகின்றது. உலக முட்டாள்கள் தினமான அன்று அரச சேவையில் எழுதுவினைஞராக பணிபுரிந்த திரு.செல்லையா கோடிஸ்வரன் என்ற நபரும் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக முட்டாள் ஆக்கப்படுகின்றார். ஆம் அன்று அவருக்கு வழங்கப்படவிருந்த சம்பள உயர்வானது வழங்கப்படவில்லை. நேரடியாக மேலதிகாரியிடம் சென்று தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக குரல் தொடுத்தார். அதற்கு அந்த மேலதிகாரி சொன்ன பதில் 'நீர் அரசுச் சேவை விதிகட்கமைய சிங்கள மொழித் தேர்ச்சி தேர்வுகளில் வெற்றிப் பெறவில்லை எனவே உமது வழமையான சம்பள உயர்வு வழங்கப்படவில்லை'. இப்போது இதை வாசித்துக்கொண்டிருக்கும் அனைவரும் யோசிப்பது 'இவ்வாறு எமக்கு அநீதிகள் இழைக்கப்படுவது என்ன புது விடயமா ' ,ஆம் உண்மைதான். ஆனால் இப்படியே கோடிஸ்வரனும் நினைத்திருந்தால் சிங்களமயமாக்கத்தை இலங்கையில் இலகுவில் ஏற்படுத்தலாம் என்று நினைத்திருந்த சிங்களத்தலைவர்களின் தலையில் இடி விழுந்திருக்காது.

நீதிமன்ற வழக்குகள் போன்று இழுத்தடிக்காமல் ஹரிப்பட பாணியில் நேரடியாக நீதிமன்ற விசாரணை நாளுக்குள் நுழைவோம். அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் திரு.கோடிஸ்வரனின் மூத்த வழக்கறிஞராக திரு.திருச்செல்வம் வாதிட்டார். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாதம் 1956 ஆம் ஆண்டில் ஆட்சிமொழிச்சட்டத்தின் இருப்பையேக் கேள்விக்குறியாக்கியது. ஆம் அந்த சட்டமானது ஆங்கிலேயர்களால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அரசியலமைப்பின் 29ம் பகுதியின் 2ம் விதிக்கு முரணானது என்று அதற்கான சான்றுகளையும் வழங்கி முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்து ஆட்டத்தை தொடங்கி வைத்தார். பொறு பொறு இப்ப இருக்க அரசியலமைப்பே நமக்கு முழுசா தெரியாது இதுக்குள்ள ஆங்கிலேயர் வழங்கின அரசியலைமைப்பு பற்றி எங்களுக்கென்ன தெரியும். சரி முழுசா தேவை இல்லை அந்த 29ம் பகுதியை பற்றிச் சுருக்கமாகச் சொல்லும் என்று கேட்பவர்களுக்காக,

29 (1) இத்தீவின் அமைதிக்கும் ஒழுங்குகளுக்கும் நல்லாட்சிக்குமாகப் பாராளுமன்றமானது ,இந்தக் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கமையச் சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைக்கொண்டுள்ளது.

29(2)இந்தச்சட்டங்கள் எதுவும்

(அ)எந்த மதத்தைக் கடைப்பிடிப்பதைக் கட்டுப்படுத்தவும் தடைச்செய்யவும் கூடாது.

(ஆ) ஏனைய சமூகங்களையோ மதங்களையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படாத கட்டுப்பாடுகளையும் குறைபாடுகளையும் ஏதாவதொரு சமூகத்தையோ மதத்தையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படக்கூடாது.

(இ) ஏனைய சமூகங்களுக்கோ,மதங்களுக்கோ வழங்கப்படாத முன்னுரிமைகளையும் சிறப்புக்களையும் ஏதும் ஒரு சமூகத்திற்கோ மதத்திற்கோ வழங்கப்படல் கூடாது.


(ஈ)எந்த மத நிறுவனத்தினத்தின் அமைப்பு விதிகளையும் அந்த நிறுவனத்தின் ஆட்சி அதிகாரத்தின் ஒப்புதலின்றி மாற்றக்கூடாது.எனவே எப்பிடியிருப்பினும் ,சட்டத்தின் மூலம் இணைத்தமைக்கப்பட்ட மத நிறுவனமாயின்

அந்நிறுவனத்தின் ஆட்சி அதிகாரத்தின் வேண்டுதலின் பேரில் அன்றி எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.

(3)இந்தப்பபகுதியின் (2)ம் விதியின் ஏற்பாடுகட்கமைய முரண்பாடு உடைய எந்தச் சட்டமும் முரண்பாடு அடைகின்ற எல்லைவரைச் செல்லுப்படியாகாது.

(4)....... 'போதும் போதும் ரொம்ப பெரிசாப் போகுது' என்ற உங்கட மைண்ட் வாய்ஸ கேட்ச்பண்ணிக் கொண்டு மீண்டும் வழக்கிற்குள் நுழைவோம்

இப்படி ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்ட அரசியலைமிப்பின் 29 (2)ம்பகுதி தங்களின் சிங்களமயமாக்கலிற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பது தங்களுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது என்று மார்தட்டியவர்களுக்கு ஆட்சி மற்றுமே எங்களிடம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று பொறி தட்டியது.



அரசு தரப்பில் வாதாடிய வழக்கறிஞரும் ஏதாவது உருட்ட வேண்டும் அல்லவா? அவரது உருட்டல்களுக்கு வருவோம்.

அரசு ஊழியர் நீதிமன்றத்தில் நீதி கோரமுடியாது, அரச ஊழியர்களின் சேவைக்காலத்துக்கு காலம் மாற்றும் உரிமை அரசுக்கு உண்டு. தமிழர்கள் தனியான சமூகம் அல்ல. 1956 இல் இயற்றப்பட்ட ஆட்சிமொழிச்சட்டம் அரசியலமைப்பு விதிக்கு முரணாணதல்ல என்று முட்டுக்கொடுத்தார். ஆனால் அரசியலமைப்பின் 29(2) விதிகளைப் பாராளுமன்றத்தின் பெரும்பாண்மை வாக்குப்பலத்தைக் கொண்டு அரசியலமைப்பு திருத்தம் மூலம் மாற்ற வேண்டிய தேவை சிறுபான்மையினரின் நலிவில் ஆட்சி அமைக்க விளைந்த பல அரசியல்வாதிகளுக்கு விளங்கியது.

அடுத்து என்ன தீர்ப்புத்தானே?

இலங்கையின் இன உரிமைகளின் ஆணிவேரான அரசியலமைப்பின் 29(2) கோடிஸ்வரனை காப்பாற்றுமா? 1962 இல் வழங்கப்பட்ட கோடிஸ்வரனின் தீர்ப்பு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தூமியின் மறுபக்கத்தில்.........

**கோடீஸ்வரனின் வழக்குத் தொடரும்.....**

# கருத்துக்கணிப்பு




கொரோனா அபத்த காலத்தில் அமுலாக்கப்பட்டிருந்த ஊரடங்கு தளர்த்தப்பட்ட சூழலில் மக்கள் சமூக இடைவெளியை மறந்து செயற்மடுவார்களாயின் அது அபத்தமான எதிர்விளைவுகளுக்கே வழிகோலும்.

கொரோனா அபத்தம் முழுமையாக நீங்காத சூழலிலும் சமூக இடைவெளியை உறுதிப்படுத்த அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் தொடர்ச்சியாக சமூக இடைவெளியை உறுதிப்படுத்தும் வகையில் விழிப்போடு செயற்படுகிறார்களா என்பதை அறியும் வகையிலேயே குறித்த கருத்தரங்கு மேற்கொள்ளப்பட்டது.

பொது வெளியில் சமூக இடைவெளியை ஒருவர் பேணும் சந்தர்ப்பங்களில், மக்கள் தொடர்கின்றனர், ஏனையவர்களால் முட்டாளக்கப்படுகின்றனர், யாருமே சமூக இடைவெளியை பேணுவதில்லை. என எழுப்பப்பட்ட கேள்வியில் ஏனையவர்களால் முட்டாளக்கப்படுகின்றனர் என்பதே பெரும்பான்மையானோரின் முடிவாய் உள்ளது.

கொரோனா அபத்தம் முழுமையாய் நீங்காத சூழலில் மக்கள் சமூக இடைவெளியை உதாசீனம் செய்வது பலவீனமான நிலையை உருவாக்கும். ஒருவர் பொறுப்புணர்ந்து சமூக இடைவெளியை பேணும் போது ஏனையவர்கள் அவ்வாறு சமூக இடைவெளியை பேணவில்லை என்றால் எந்த பலனுமே இல்லாமல் போவதோடு குறித்த நபரும் ஊரோடு ஒத்துப்போகும் அபாய நிலையும் உள்ளது. நாம் எல்லோருமே பொறுப்புணர்ந்தால்த்தான் கொரோனாவை விரட்டலாம்.

# ஜனகன் மகள் ஜானகி

நீண்ட உறக்கத்தின் பின் கண் விழித்துப்பார்க்கிறேன். நடப்பது கலியுகம் என்றார்கள். எனக்கு நடந்தது தான் கலியுகம் என்றேன். எவரும் நம்பத் தயாரில்லை. ஆதாரம் காட்டு என்றார்கள். சேதாரமான நான் தான் ஆதாரம் என்றேன். வான்மீகி வடித்ததை, கம்பர் கடைந்ததை, துளசிதாசர் தூர்வாரியதை என் முன் வைத்தனர். எனக்கு நடந்ததை எவனெவனோ எழுதியிருக்கிறான். எனக்கு நடந்ததை நான் சொல்கிறேன். நானே சொல்கிறேன். நம்பத் தயாரில்லை. நடப்பதும் கலியுகம் தான்.

ஒருவன் எழுந்தான். மூவரையும் நிராகரிக்கும் என் கட்சிக்கு ஆதரவளித்தான். அடுத்த நொடி 'அசுரன்' தந்தான். அந்த மூவரும் முன்மொழிந்தது இராமாயணம் என்றால் இவன் முன்மொழிவது இராவணாயனம். மீண்டும் தனிக்கட்சியானேன்.




கலியுகத்திலே பெண்களை புதுமை செய்தானாமே! இல்லை! இல்லை! பெருமை செய்தானாமே ஒரு கவிஞன்! எட்டயபுரத்து தீயாம்! பெயர் பாரதீயாம்! கண்ணம்மாக்களை கொண்டாடியவன் கண்களுக்கு நான் தெரியாமல் போனதேன்? பாஞ்சாலிக்கு சபதம் எழுதிய பாரதி காலத்தால் மூத்த என்னை கண்டுகொள்ளாமல் விட்டதேனோ? மண்ணை நேசித்தவன் மண்ணின் மகளான என்னைத்தானே முதலில் பாடியிருக்க வேண்டும்? மறந்து விட்டானா? பயந்து விட்டானா? என் பிறப்பு முதல் இறப்பு வரை போர்த்திய களங்கங்களை விலக்க ஒரு கவிராயனும் இல்லையா?

எவனாவது சீதாயணம் எழுதியிருக்கிறானா? இருந்த விரக்தியில் இறுக்கிக் கத்தினேன். எவனும் எழுதான். எழுத்துக்கு அழகு சேர்க்க பெண்கள் தேவைப்படுகிறோம். பெண்களுக்கு அழகு சேர்க்க எழுத்துக்கள் தயாராயில்லை. சரி! எவளாவது சீதாயணம் எழுதியிருக்கிறாளா? என்றேன். பதிலே இல்லை. சிங்கப் பெண்களுக்கு சீரியல்ப்பெண்கள்தான் சீதைகள்! எவனும் வேண்டாம்! எவளும் வேண்டாம்! என் கதையை நானே எழுதுகிறேன். என் கதைக்குள் கதைக்காமல் விட்ட கதையை நானே எழுதுகிறேன்.




தொண்டரடிப்பொடியன்

கப்பச்சினோ கதைகள்

இராமாயணம் எழுதுபவர்களும் சரி, வாசிப்பவர்களும் சரி இராவண இறப்போடு இராமாயணத்தை முடித்து விடுகிறார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் அடிப்படையே இங்குதான் ஆரம்பிக்கிறது. இராவண இறப்பின் பின்புதான் இராகவனின் உண்மை உருவம் தெரியத்தொடங்குகிறது.

நடந்ததை நடக்காததாயும், நடக்காததை நடந்ததாயும் எழுத்துக்களால் காட்டுபவர்களே! இது தான் நடந்தது என்று அடித்துச்சொல்ல முடியாத போது எதுவும் எழுதலாம்தானே? இனிமேலாவது நடப்பவற்றை அன்றன்றே ஆவணப்படுத்திக்கொள்ளுங்கள்! அடுத்த தலைமுறைக்கு ஆதாரத்துடன் சொல்லுங்கள்! அனுபவப்பட்டவள் சொல்கிறேன்! எனக்காக எழுதாவிட்டாலும் பரவாயில்லை, உங்கள் அம்மாவுக்காக, காதலிக்காக, மனைவிக்காக, சகோதரிக்காக, சந்தித்த ஒரு பெண்ணுக்காக முக்கியமாக உங்கள் மகளுக்காக என் கதையை மாற்றி எழுதுங்கள்!

மண்ணில் பிறந்ததாய் சொல்லப்பட்டதால்த்தான் என்னை மண்புழுவாய் நசுக்கப்பார்க்கிறார்கள்! மாற்றும் திறனாளிகளே! என் பிறப்பை மாற்றி எழுதுங்கள்! என் அப்பா ஜனகனை நிறையப்பிடிக்கும்! அவர் வளர்ப்பு மகளாய் இராமல் சொந்த மகளாகவே இருந்து விடுகிறேன். அப்படியே எழுதி விடுங்கள்!




சஹானா

அடுத்து, வில்லை வளைப்பவன் என்னையும் வளைத்துவிடுவான் என்ற வழக்கத்தை மாற்றுங்கள்! மாடத்தில் இராமனை பார்த்த கணத்திலேயே எம் கண்கள் கலந்து, காதல் நிறைந்தது. பெற்றோர் சம்மதிக்க நடந்த காதல் கல்யாணமாய் என் கல்யாணத்தை மாற்றி எழுதுங்கள்.



ஆண்மகனை வீரனாக்க, என்னை வெற்றியின் பரிசுப்பொருளாக்கும் அந்த மூடத்தனத்தை மூட்டையில் கட்டி அப்புறப்படுத்துங்கள்!

கணவனுடன் கானகம் செல்லும் போது என்னவருக்கும், இளையவருக்கும் கையில் கொடுத்தனுப்பினீர்களே! ஆயுதங்கள்! நானும் அவற்றோடு அடவிக்கு சென்றதாக எழுதி விடுங்களேன். தற்காப்பை அன்றே நான் சொன்னதாக இருந்ததாலும் சரி! மனைவியை வீரப்பெண்ணாக்கிய இராமன் என்று சொன்னாலும் சரி! மகளை போர்வாளாய் வளர்ந்த ஜனகன் என்றாலும் சரி! அது பற்றிய கவலையில்லை. ஆனால், என் கைகளில் ஆயுதம் வேண்டும்! அவற்றோடே நான் கானகம் புக வேண்டும்!



என்னை மீட்கத்தான் இராம இராவணப்போர் என்று நினைத்திருந்தேன். ஆனால் இராம இராவணப்போர் நடக்கத்தான் நான் கடத்தப்பட்டேன் என்று பின்னர்தான் தெரிந்து கொண்டேன். இராவண வதம் தான் தேவை என்றால் நானே செய்திருப்பேனே? சடாயு மாண்டு, வாலி சாகடிக்கப்பட்டு, இலங்கை எரிக்கப்பட்டு, பல லட்சம் உயிர்கள் மரணிக்கச்செய்யப்பட்டு, என் பிள்ளைகளும் வனவாசம் அனுபவித்து, என்னவரை பிரிந்தே இருந்த இந்த கொடுமைகள் எல்லாம் நடந்தேயிருக்காது. முக்கியமாக காலமெல்லாம் நான் படி தாண்டிய பத்தினியாக, மாற்றான் மனையில் இருந்தவளாக கறை பட்டிருக்க மாட்டேன். என் கற்பும் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்காது. இரண்டாம் வனவாசத்திற்கும் அவசியமிருந்திருக்காது. எனவே மாற்றி எழுதுங்கள். மாயமான் மீது என்னவர் ஆசை கொள்ள, அதைத்தேடி நான் நான் போக, என்குரல் கேட்டு எனைத்தேடி வந்த என்னவரை சூர்ப்பனகை கடத்திச் செல்ல, வானரங்களோடு நான் சென்று மீட்டதாயும், என்னவரில் நம்பிக்கை கொண்டு அக்கினிப்பரீட்சைகள் இன்றியே அவரை ஏற்றதாயும், ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் முடிய மக்கள் என்னவரையும் சூர்ப்பனகையையும் இணைத்து கதைக்க நாங்கள் இருவரும் மக்களை தெளிவுபடுத்தியதாகவும் , மக்கள் எங்கள் ஒற்றுமையை கண்டு வியந்து வாழ்த்தியதாகவும் எழுதி விடுங்களேன் என்று கேட்குமளவிற்கு நான் ஆசை பிடித்தவளல்ல. எனக்கு என் கணவரோடு கதையிலாவது நீண்டகாலம் வாழும் பேராசை பிடித்தவள் அவ்வளவே! எனவே, மான் மீது நானே மையல் கொண்டதாக இருக்கட்டும். மான் தேடி இருவரும் சென்ற பின் பெண் தேடி வந்தவனை வில் கொண்டு நானே கொன்றதாக எழுதிவிடுங்கள்! என் கணவரோடு பல்லாண்டு சேர்ந்து வாழ்ந்ததாய் முடித்துவிடுங்கள்.

எழுதப்போகிறவர்களே!
எழுத முதல் ஒரு நிமிடம்!
யாராக இருந்து எழுதப்போகிறீர்கள்?
ஆணியவாதியாகவும் வேண்டாம்! பெண்ணியவாதியாகவும் வேண்டாம்!
நடுநிலைவாதியாக வேண்டவே வேண்டாம்! ஒரு மகளின் தந்தையாய் இருந்து எழுதுங்கள்! ஜனகனாய் இருந்து உங்கள் மகள் ஜானகியை எழுதுங்கள்!
எழுதுவீர்களா???

இப்படிக்கு,

ஜனகன் மகள் ஜானகி
(சீதை)

**அடுத்த வார கப்பச்சினோ கதைகளில்**

ஒரு மயானம்
பேசப்போகிறது...

# கொரோனா காலத்து நினைவுகள்

சு.விநோஜன்
பொறியியலாளர்
திருமலை

எல்லையில்லாமல் எண்ணிக்கையில்
நீண்டு கொண்டிருக்கிறது
கொரோனா கொலைகள்!

குடிமகனாய் வீடுகளிற்குள் ஒளிவதே
என் கடமையாய் இருக்கிறது...
உலகின் ஏதோ மூலையில் யாரோ
ஒருவர் மரணித்துக்
கொண்டிருக்கிறார்...
செயற்கை நுண்ணறிவு வரை
தொட்ட மனிதனின் அறிவிப்புலத்தை
மீண்டும் ஒருமுறை இயற்கை
மட்டந்தட்டி விடுகிறது...

எங்கோ ஓர் உயிர் அடங்கிக்
கொண்டிருக்கும் கணத்தில் இங்கு
ஊர் அடங்க உத்தரவு
பிறப்பிக்கப்பட்டுள்ளது...
அடங்க மறுப்போர் குற்றம்
செய்தவராக
கருதி தண்டிக்கப்படுகிறார்...
முழு நாடுமே ஒரு சர்வாதிகார
ஆட்சியை ஏற்றுக் கொள்கிறது...
அதனை வரவேற்கவும் செய்கிறது...

இலங்கை முழுவதும் ஒரே பூட்டால்
பூட்டப்படுகிறது...
பூட்டிய
திறப்பு
அதிமேதகு
ஜனாதிபதியின்
கைகளில்
வைக்கப்பட்டுள்ளது

ஆளில்லாத வீட்டில்
செடிகளிற்கு நீர் ஊற்றும்
ஒரு
தோட்டக்காரனைப்போல்
ஜனாதிபதி
அந்தத்திறப்பைப்
பயன்படுத்துகிறார்...

சில மணித்தியாலங்களிற்கு
பூட்டு
திறக்கப்படுகிறது
செடிகள் சில தமக்குத்
தேவையான நீரை
தாமே பெய்ப்பித்துக்
கொள்கின்றன...

சில செடிகள் வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி
வழமைபோலே காத்திருக்கின்றன
சில செடிகள் ஆழமாய் வேர்விட்டு அதிகமாய் நீரைப்
பதுக்கிக் கொள்கின்றன...

ஆட்சி சர்வாதிகாரமானதால்
செடிகளிடையே
சமத்துவத்தை எதிர்பார்க்க முடியாது
என
மழை மேகங்கள் இரண்டு பேசிக்
கொள்கின்றன...

நேரம் முடிந்ததும்
பூட்டிக் கொண்டு புறப்படுகிறார்
ஜனாதிபதி...

வானம் பார்த்து சிரித்துக்
கொள்கிறது...
வானத்தின் மீதும் சட்ட
நடவடிக்கை எடுக்கப்படுகிறது...
ஒரே திரையால் முழுவானமும்
இழுத்து மூடப்படுகிறது...
பராபட்சம் இல்லா ஆட்சி குறித்து
செடிகள் பாராட்டி மகிழ்கின்றன...

நாட்கள் செல்லச்செல்ல செடிகளின்
சுதந்திரம் குறுகிப் போகின்றது...
ஒவ்வொரு செடியும் ஒன்றை ஒன்றை
தொடாத வண்ணம் காற்றில்
அசையுமாறு சட்டம்
பிறப்பிக்கப்படுகிறது...

தோட்டக்கார
னின்
வருகையையும்
செடிகள் இனி
எதிர்பார்ப்பது
சாத்தியமற்றதாகிறது...



வானம் தாண்டி வளர
நினைத்த செடிகளின்
நிலையை
திரைக்குப் பின்னால் நின்று
வானம் வேடிக்கையாய்ப்
பார்க்கிறது...

உணர்வைத் தாண்டி அறிவு
வளரும் போது அது அழிவின்
பாதையாகவே அமைகிறது என
வரண்டு நிற்கும் செடிகளை
பார்த்து
உயர்ந்து நிற்கும் மலைகள் சில
முனகிக் கொள்கின்றன...

கூட்டுக்குள் இருக்கும் செடிகளை வாசல் வரை வந்து
வாஞ்சையாய் பார்த்துச்செல்கிறது பசியோடு ஒரு மான்
கூட்டம்...

கால் நடைகளின் சுதந்திரம் குறித்து மார்தட்டிக் கொள்கிறது
கடந்து போன ஒரு  பெருங்காற்று...

வீதிப் புகைகள் காணாமல் போனதால்
முகக்கவசம் அணியாமலே வீதியில்   அமர்ந்து தன்
புடைவையின் துவாரங்களை தைத்துக் கொண்டிருக்கிறாள்
இயற்கை அன்னை...

செடிகளின் பூட்டு தொடர்ந்து பூட்டியே கிடக்கிறது...
வானத்தின் திரை தொடர்ந்தும் மூடியே கிடக்கிறது...
சுற்றியுள்ள அனைத்தும் எள்ளி நகையாடுகின்றன...
செடிகளைப் பார்த்து
செடிகள் தொடர்ந்தும் வாடுகின்றன...
ஆனாலும் விடாது போராடுகின்றன...

செடிகள்சில தம் தனிமையை கவிதையாய் மொழிகின்றன...
அது அங்கு பூக்களாய் பூக்கின்றன...
செடிகள் சில இருப்பதைக் கொண்டு உணவு பரிமாறுகிறது...
அது கனிகளாய் கனிகின்றன...
செடிகள் சில அழியும் தன் இனத்தை ஈடு செய்ய
விதைகளை பெருக்குகின்றன...
வீரியமான விதைகள் முளைத்து வருகின்றன...

வானம் திரையை கிழித்து இறங்கி வர மறுக்கிறது...
செடிகள் இலட்சியத்தோடு வானை நோக்கி வளர்கின்றன...
செடிகள் வீர ஆவேசத்தோடு வானைத் தொட
புறப்படுகின்றன...
இடையில் என்ன நேர்ந்தாலும் செடிகள் முயன்று கொண்டே
இருக்கின்றன...
மானுடம் மீண்டும் ஒரு முறை வெல்கிறது...
அன்பே உருவான பரம்பொருள் அதனைக் கைதட்டிக்
கொண்டாடுகிறது...

மானுட வரலாற்றில் ஒரு கறுப்புப் புள்ளியாய் இது பதிவு
செய்யப்படுகிறது!
மானுட யுகத்தின் கடைசி புள்ளியாய் இது மாறுமோ என
நினைத்த ஏதோ ஒன்று மெள்ளப் புதைந்து போகிறது.

பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும்
மானுடம் வெல்கிறது!
மானுடம் கற்றுக் கொள்கிறது!
மானுடம் பயணிக்கிறது!



## நிஜ நாயகர்களுக்கு நன்றிகள்



~உலக மக்கள்~

அதன் பின்னர் எதுவுமே நடக்காதது போல இயல்பாக எல்லோரையும் நோக்கியவன் "வெல்! இப்ப இருக்கிற ப்ரொப்லம் மார்க்கெட் ல ஒரே போல இரண்டு ப்ரொடக்ட் வரப்போ கூடுதலா ஜெயிக்க போறது முதலாவதா ரிலீஸ் ஆகுற ப்ரொடக்ட் தா. ரைட்?"

“யெஸ் சார்"

"இப்போ எனக்கு தேவை மார்க்கெட் ல எங்க ப்ரொடக்ட் இரண்டாவதா ரிலீஸ் ஆனாலும் நம்ம கம்பனியோட ப்ரொடக்ட் தான் முன்னால நிக்கனும். எனி ஐடியாஸ்?" என்று அனைவரையும் பார்த்து கேட்கவும் ஒவ்வொருதரை ஒருவர் பார்த்துக் கொண்டவர்கள் தீவிரமாக யோசிக்க தொடங்கினார்கள்.

தனது தொண்டையை இலேசாக செறுமிக் கொண்ட பிரதீப் “சார்! ஏன் நம்ம விலையை குறைக்க கூடாது?"

"நோ பிரதீப்! விலையோட தரமும் நிர்ணயம் ஆகும். இவ்வளவு நாளும் விலையை குறைக்காம நம்ம ப்ரொடக்ட் ஓட விலை இப்போ குறைஞ்சா கம்பனியோட தரமும் குறைஞ்சு போய்டும். வேற? மிஸ்.ஆராதனா?"




“சார்?"

“உங்களுக்கு எதாவது ஐடியா இருக்கா?"

“சார்! இப்போ வெளிவந்து இருக்கிற ப்ரொடக்ட் ல இல்லாத ஃபீச்சரை நம்ம ப்ரொடக்ட் ல சேர்க்கனும். அப்போ விலையும் குறைக்க தேவை இல்லை. மார்க்கட் லயும் முன்னுக்கு நிற்க முடியும்"

"எக்ஸாக்ட்லி! டெவலப்மன்ட் டீம் என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ தெரியாது! எனக்கு ரிலீஸ்'க்கு முன்னம் ப்ரொடக்ட் ல நல்ல ஃபீச்சர் ஒன்று சேர்க்கப்பட்டு இருக்கனும். ப்ரதீப் லுக் இன் டூ திஸ்! ஆராதனா டெவலப்மன்ட் டீம் கு தேவையான எல்லா ஏற்பாடும் செய்து கொடுங்க!" என்றவன் ஆராதனாவின் யெஸ் சாரை கூட காதில் வாங்காமல் புயலென வெளியேறவும் பட படவென வேலைகள் ஆரம்பமானது.

அன்று அவர்கள் நினைத்ததை விட சிறப்பாகவே ப்ரொடக்ட் டெவெலப் ஆகி நல்ல வரவேற்பையும் பெற்றதை முன்னிட்டு பெரிய பார்ட்டி ஒன்றை ஆதித்யன் ஒழுங்கு படுத்தி இருந்தான். அனைவருக்கும் வாழ்த்து கூறி தனது சிறிய உரையொன்றை முடித்தவன் ஆராதனாவையும் அழைத்துக் கொண்டு காரில் சென்று கொண்டிருந்தான். அதுதான் தகுந்த சந்தர்ப்பம் என்று எண்ணிய ஆராதனா

"சார்" என்று தயக்கமாக இழுக்கவும்

"யா! ஆராதனா" என்று தனது கைபேசியை வெறித்தவாறே கூறவும் ஒரு பெருமூச்சை வெளியிட்டவள் "சார்! நான் என்னோட வேலையை விடலாம் என்று இருக்கேன்' என்று மெதுவாக தான் கூற வந்ததை உரைத்தாள்.

"வாட்" என்று அதிர்ந்து போய் அவளை வெறித்த ஆதி "ஏன் ஆராதனா? இதை விட நல்ல ஆஃபர் எங்கயும் வந்து இருக்கா? நான் வேணுமென்டா சம்பளத்தை கூட்டித் தாரேன்"

'நோ! நோ சார். நான் இனி வேலையை விட்டுட்டு என்னோட லைஃபை பார்க்கலாம் என்று இருக்கேன்'

“புரியல?"

"அப்பாவும் அதை தான் ஃபீல் பண்றார். வேலையை விட்டுட்டு இனி திருமணம், சின்ன ஒரு வேலை லைக் டியூஷன் குடுக்கிறது இப்பிடி அமைதியான ஒரு வாழ்க்கைக்குள்ள போகலாம் என்று இருக்கேன்!" என்றவுடன் வெறுப்பாக சிரித்தவன் 'அமைதியான வாழ்க்கை' என்று முணுமுணுத்த வாறே வெளியில் வெறித்தான். சிறிது நேரத்தில் ஆராதனாவின் வீட்டை கார் அடையவும் அவளுடன் சேர்ந்து இறங்கினான். அவன் இறங்கவும் ஆராதனா தயங்கி நிற்க கால்களை சற்று அகட்டி அவனது காற்சட்டை பொக்கெற்றில் கைகளை விட்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்றவன்

"போறது என்று முடிவு பண்ணிட்டீங்க ரைட்?"

"யா சார்"

"சரி! கம்பனி ஷெரூல் படி மூன்று மாதம் நீங்க புதுசா வர்ரவங்களை ட்ரயின் பண்ணி குடுத்துட்டு பிறகு லீவ் ஆகலாம். நாளைக்கே புது கன்டிடேட் ஐ செலக்ட் பண்றதுக்கு எல்லா ஆயத்தங்களையும் செய்ங்க" என்றவன் அவள் அமைதியாக தலையசைத்ததும் காரில் ஏற சென்றுவிட்டு சற்று தயங்கி நின்று "திரும்பவும் சேரணும் என்று ஐடியா இருந்தா எப்போவுமே நீங்க அதை சொல்லலாம்" என்றுவிட்டு காரில் ஏறி சென்றான்.

அவன் சென்றவுடன் ஆனந்தமாக அறைக்கு வந்தவள் "நிலா!" "நிலா" என்று கூவவும் சட்டியில் ஒட்டிய தோசையை திருப்ப முடியாமல் தள்ளாடியபடி அடுப்படியில் நின்ற நிலா அடித்துப்பிடித்துக் கொண்டு ஓடிவந்து "ஏன்டி பிசாசே கத்துற? என்னாச்சு?" என்று பதறியபடி கேட்கவும் அவளது கைகளை பற்றிக்கொண்டு சுற்ற தொடங்கினாள். அவளின் இழுவைக்கு சென்றவாறே "என்னடி நடந்திச்சு? இந்த குதி குதிக்கிற?" எனவும் "நான் வேலையை விட போறன்"

"வாட்?"

"யெஸ்" என்று இமைகளை மூடித்திறந்தவளை கண்டு இடுப்பில் கைகளை வைத்தவாறு முறைத்தவள் "வேலையை விட்டதுக்கு சந்தோசப் படுற ஒரே ஒரு ஆள் நீ தான் டி" என்று விட்டு "அய்யய்யோ என்னோட தோசை " என்று கத்தியபடி சமையலறையினுள் சென்று மறைந்தாள். அவளைக் கண்டு சிரித்தவளும் குளிப்பதற்காக மகிழ்வுடனே உள்ளே சென்றாள்.

காரில் இருந்த ஆதியின் மனமோ எதையோ யோசித்தபடி இருக்க புருவங்களோ சுருங்கியவாறே இருந்தது.

"என்ன தான் ஆனது இந்த ஆராதனாவுக்கு? திடீர் என்று கல்யாணம், வாழ்க்கை என்று ஏதோவெல்லாம் சொல்லிட்டு இருக்கா? இல்லை எதுவோ இருக்குது. கண்டு பிடிக்கனும். நோ ஆராதனா நான் உன்னை போக விடமாட்டேன். அதுக்காக நான் என்ன விலை கொடுக்க வேண்டி வந்தாலும் பரவாயில்ல" என்று முணுமுணுத்தவாறே சீட்டில் சாய்ந்து அமர்ந்தான்.

**இதயம் துடிக்கும்...**

# கந்தரோடையின் பேரறிஞர் சிற்பி சி.சிவசரவணபவன்


அ.வியாசன்
நான்காம் வருடம்
இந்துக்கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் புனித பூமி கந்தரோடை. இந்தப்பிரதேசம் சிறிய பண்பாட்டு விழுமியங்களை கொண்ட கிராமமாகக்காணப்பட்டாலும் இன்றைக்கு 2500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அதாவது பௌத்த மத உருவாக்கத்துக்கு முற்பட்ட காலத்திலே தலைநகரமாக இந்தக் கிராமம் விளங்கியது என்று ஆய்வுகள் மூலம் அறியக்கிடைக்கின்றது. இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்த குஞ்சிசபாதபட்டரின் வழி வந்த சிவசுப்பிரமணியக்குருக்களும், மங்களேஸ்வரக்குருக்கள் வழி வந்த சௌந்தராம்பாளும் இல்லற பந்தத்தில் இணைந்து கொண்டனர். இவர்களின் மணவினைப் பேறாகப் பத்துப் பிள்ளைச்செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இத் தம்பதியரின் ஆறாவது மகவாக காரைநகரில் பெப்ரவரி 28, 1933இல் இப் பூவுலகிற்பிரவேசித்தவரே பிந்நாளில் “சிற்பி” எனப் பலராலும் அறியப்பட்ட சி.சிவசரவணபவன் எனும் இயற் பெயரைக் கொண்ட சிற்பி ஐயர்.



ஆரம்பப்பாடசாலைக்கல்வி கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் தொடங்கி பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் தொடர்ந்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை மாணிபட்டம் பெற்றார். ஆசிரியராகப் பதவி ஏற்றதன் பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பட்டமும் யாழ். பல்கலைகழத்தில் முதுகலைமாணி பட்டமும் பெற்று கொண்டார். மானிப்பாய் இந்துக்கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பண்டாரவளை புனித சூசையப்பர் கல்லூரி, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரி ஆகியவற்றின் அதிபராகச் செயற்பட்டர்.

அன்பும், பண்பும், நன்னடத்தையும், மனிதநேசிப்பும், அடக்கமும் கொண்டவராகத்திகழ்ந்த சிவசரவணவன் ஒரு எழுத்தாளனாக 50களில் உருவாக்கி 58இல் பிரபல்யம் அடைந்தார். பண்பான தனது எழுத்துகள் போலவே வாழ்ந்து காட்டிய பெருந்தகை இந்த சிற்பி. தரம் வாய்ந்த பிரபல்யம் மிக்க ஆக்கங்களால் ஈழத்துத்தமிழ் இலக்கியத்துறையை செழுமைப்படுத்திய எழுத்தாளர்களான செங்கைஆழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், அன்னலட்சுமி, ராஜதுரை, சா.வே.பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், சாந்தன், கல்வயல் வே.குமாரசாமி, மயிலன், பொ.சண்முகநாதன், மு.பொ.தி.ஞானசேகரன், மு.கனகராஜன், பா.சத்தியசீலன், மட்டுவிலான், கவிதா, பாமா






ராஜகோபால், கானமயில்நாதன், து. வைத்தியலிங்கம், வி.க.ரட்ணசபாபதி, இளையவன், செ.கதிர்காமநாதன், முனியப்பதாசன், க.பரராசசிங்கம், மணியம், முகிலன், பெ. சண்முகநாதன் ஆகியோர் கலைச்செல்வியின் பண்ணையில் வளர்ந்தவர்களே என்ற சிற்பியின் கூற்றினை எண்ணிப்பார்க்கும் போது ஈழத்தில் இத்தகைய பிரபல்யம் வாய்ந்த ஓர் எழுத்தாளர் பட்டாளத்தை வளர்த்த பெருமையை வேறு எந்த இதழாசிரியர்களும் பெறவில்லை என்று 22.11.2015 தினக்குரல் பத்திரிகையில் தி.ஞானசேகரன் எழுதிய “ஈழத்து இலக்கிய வரலாற்றில் புகழ் பூத்த எழுத்தாளர்களை உருவாக்கிய சிற்பி” என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளர். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே கலைச்செல்வியின் இலக்கியப்பணியும் வரமாகிப்பதிவாகிறது.

ஈழத்துகல்விச் சமூகத்திலும் கலை இலக்கியப்பரப்பிலும், எழுத்துலகிலும் தனக்கெனதனி இடம் பெற்றவராக மூத்த பத்திரிகையாளர் பேரறிஞர் சிற்பி சிவசரவணபவன் திகழ்கின்றார். இவரது முதற் சிறுகதையாக “மலர்ந்தகாதல்” 1952இல் சுகந்திரன் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. கோயில் பூனை, பிறந்த மண், அம்மன் அருள், உயிரோவியம், ஒரே ஒருத்திக்கு, தெய்வீகம் போன்ற சிறுகதைகளையும் அத்தோடு சிறுகதை தொகுப்புக்களையும் எழுதியுள்ளார். அதாவது நிலவும் நினைவும், சத்தியதரிசனம், நினைவுகள், படிவநிலை என்பன சிறுகதை தொகுப்புகள் ஆகும். இவரது நாவல்களாக உனக்கானக் கண்டேன், சிந்தனைக் கண்ணீர், அன்பின் குரல் என மூன்று நாவல்களை எழுதியுள்ளார். நாவல் எழுத்தாளராக் சிறப்புப் பெறும் போது “சிற்பி” என்ற பெரும் பட்டம் ஒன்றை தனது பெயரின் முன்னால் பெற்றுக்கொண்டு சிற்பி சரவணபவன் என்ற பெயருடன் அழைக்கப்பட்டார். இது அவர் நாவல் மூலம் பெற்றுக் கொண்ட சிறப்பாகும். மேலும் ஈழத்து எழுத்தாளர் பன்னிரண்டு பேரின் சிறுகதைகளைத்தொகுத்தது 1958 இல் ஈழத்துச் சிறுகதைகள் என்னும் தொகுப்பை கந்தரோடைத் தமிழருவிப் பதிப்பகம் மூலம் வெளியிட்டார். தமிழகத்தின் கல்கி, மஞ்சரி, புதுமை, தீபம் ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள்

வெளியிடப்பட்டது. அத்தோடு சிற்பி சிவசரவணபனின் பத்திரிகை பணிகளை எடுத்துக் கொண்டால் விளக்கு என்ற கல்வி இதழ் ஒன்றுக்கு ஆசிரியராக பணியாற்றினார். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட இந்து சாதனம் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தார். இவரின் அடையாளமாக இருந்த கலைச்செல்வி இதழில் 1958 இலிருந்து 1966 வரை எட்டு ஆண்டு காலம் ஆசிரியராக செயற்பட்டு அதனை வெளியிட்டு சாதனை படைத்தார்.




"கலைச்செல்வி சஞ்சிகை மூலம் ஈழத்து இலக்கிய உலகிற்கு சிற்பி ஆற்றிய பணி அளப்பரியது. 1958ஆம் ஆண்டு ஆடி மாதம் கலைச்செல்வி சஞ்சிகை வெளிவந்த போது ஈழத்து இலக்கியப் போக்கின் மறுபுறுத்துக்கான தளம் திறக்கப்பட்டது" என ஈழத்தின் பிரபல எழுத்தாளரான செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் கைலாசபதி கலைச்செல்வி பற்றிக் குறிப்பிடுகையில், "முற்போக்கு இலக்கியம் உச்சக்கட்டத்தில் இருந்த அறுபதுகளை ஒட்டிய காலப்பகுதியில் எதிரணியில் இருந்தவர்களுக்கு ஒரு ஒதுங்கும் இடமாக கலைச்செல்வி விளங்கியது" என்றார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் சிற்பி, "பேராசிரியர் கைலாசபதி உட்பட முற்போக்கு எழுத்தாளர்கள் பலர் கலைச்செல்வியில் எழுதியுள்ளார்கள். அரசியற் சார்பு, இலக்கிய அணி, வாழ்விடம், கல்வித்தரம், சாதி, சமயப்பரிவுகள் போன்றவற்றை நான் கவனத்தில் கொள்வதில்லை. இலக்கிய தரம் ஒன்றையே நான் கருத்தில் கொண்டு கலைச்செல்வியை நடத்தினேன்." எனக் குறிப்பிட்டுள்ளார். "கலைச்செல்வி சஞ்சிகை மூலம் ஈழத்து இலக்கிய உலகிற்கு சிற்பி ஆற்றிய பணி அளப்பரியது. 1958ஆம் ஆண்டு ஆடி மாதம் கலைச்செல்வி சஞ்சிகை வெளிவந்த போது ஈழத்து இலக்கியப் போக்கின் மறுபுறுத்துக்கான தளம் திறக்கப்பட்டது" என ஈழத்தின் பிரபல எழுத்தாளரான செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார். ஈழத்து இதழியல் வரலாற்றில் கலைச்செல்விக் காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. அதன் ஆசிரியர் சிற்பி சரவணபவனின் நாமம் என்றென்றும் நிலைத்து நிற்கும்.




சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம், மொழி பெயர்ப்பு என ஆக்க இலக்கியத்திலும் ஆழமாக வேர் ஊன்றியவர் அவர். அது தவிர சிறந்த பத்திரிகையாளராகவும் செயற்பட்டவர் உதயதாரகையின் ஆசிரியராகவும் இருந்தவர் என்றும் கூறப்படுகின்றது. யாழ்பாணத்தில் வெளியான பல்வேறு பத்திரிகைகளுடன் அவர் தொடர்புபட்டு இருந்தார். குறிப்பாக உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் அரசியல் மற்றும் இலக்கியம் பக்திகளை வெவ்வேறு புனைபெயர்களில் தாம் நோய் வாய்ப்படும் வரை எழுதியுள்ளார்.

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமாள் மீது திருப்பள்ளி எழுச்சியினை எழுதி இந்தியாவில் ஒலி நாடாவில் பதித்து வெளியிட்டார். மேலும் சிற்பி அவர்கள் எழுதிய கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயத்தின் மீது எழுதிய பத்திப் பாடல்களை அவருடைய புதல்வர்களால் சிற்பியின் இறப்புக்கு பின்னர் வெளியீடு செய்யப்பட்டது.

இவர் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராக கிராமத்தில் தனது பணிகளை மேற்கொண்டர். இவரிடம் உயர்தர கல்வியை பூர்த்தியை செய்த மாணவர்கள், உயர் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி கற்றனர் மேலும் உயர் பதவிகளில் இருப்பவர்கள் கூட மேலதிக ஆங்கில அறிவுகளை பெற்றுக்கொண்டனர். இன்றும் இவருடைய கந்தரோடை சேர்ந்த மாணவர்களோடு உரையாடும் போது சிற்பி ஐயாவிடம் படித்த ஆங்கிலம் இன்னும் தங்களுக்கு பெறுமதியாக இருக்கிறது என்று கூறுவார்கள்.




பேரறிஞர் சிற்பி சிவசரவணபவன் அவர்கள் தனது முயற்சியால் ஈழத்து இலக்கிய உலகில் பரிசுகள், பதக்கங்கள், தங்கப்பதக்கம், விருதுகள், பராட்டு விருதுகள், கௌரவப் பட்டங்களை பெற்று கந்தரோடை கிராமத்திற்கு பெருமை பெற்று தந்த உன்னதமான மகானாக திகழ்கின்றார். இவர் உடல் நலக்குறைவினால் 09.11.2015 (ஐப்பசி திரயோகதசித் திதியில்) முத்தியடைந்தர். இவருடைய நினைவாக கந்தரோடை ஆலடி இந்து இளைஞர் மன்றத்தினால் சிற்பி நினைவலைகள் என்ற நூலும் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களினால் நினைவுப்பேருரை நடைபெற்றது. தமிழ் மக்கள் மனதில் நீங்காது சிற்பி ஐயா அவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

# திருவாசக அரண்மனை
















ஒளிப்படம் : துமி

# சித்திராங்கதா



காவ்ய மோகன்

ஆடல் 03

வீரர்கள் மரக்கலங்களை விட்டிறங்கி இலங்காதீவில் அடி வைத்தனர்.

துறைமுக மண்டபமொன்றில் காத்திருந்த சேனாதிபதி மகிழாந்தகன் படைத்தளபதியை நோக்கி விரைந்து முன்வந்து "வரவேண்டும் வீரத்தளபதி வருணகுலத்தாரே! தங்கள் வரவு எங்கள் தைரியமாகிறது.
தக்க சமயத்தில் தமிழகத்தின் துணையை எண்ணி ஈழநாடு பெருமகிழ்வு கொள்கிறது" என்றவாறு வணங்கி நின்றான்.

சேர, சோழ, பாண்டியர்கள் என மூவேந்தர்கள்தம் முடியாட்சிகள் முடிவடைந்த பின் தஞ்சை சோழமண்டலத்தை விஜய நகர பேரரசின் கீழ் நாயக்கர்கள் நல்லாட்சி செய்து வந்த காலம் அது. நாயக்கராட்சியின் பொற்கால மன்னர்~ மூன்றாம் நாயக்க வேந்தர்~ இரகுநாத நாயக்கர் அரியணையில் அமர்ந்திருந்தார்.

முதலாம் நாயக்க வேந்தரான சேவப்ப நாயக்கர் காலம் தொட்டு இரகுநாத நாயக்கர் காலம் வரை தஞ்சையில் வேற்றுமொழி அதிகாரத்தைக் கொண்டு தாய்த்தமிழைச் செழிக்க வைத்த பெருமை தஞ்சை ராஜமந்திரியும், ராஜகுருவுமான கோவிந்த தீட்சிதரை சார்ந்து நின்றது.

இரகுநாதநாயக்கர் அரசவைக்கு யாழ்வேந்தன் திருமுகம் (அரசன் ஓலை) தாங்கி தூதுவன் ஒருவன் சில நாட்களுக்கு முன் வந்திருந்தான். செந்தமிழில் எழுதப்பெற்றிருந்த திருமுகத்தை ராஜமந்திரி கோவிந்தர் அவையில் வாசிக்கத் தொடங்கினார்.

"தஞ்சை நாயக்க வேந்தருக்கு என் வந்தனங்கள்.
பொல்லாத்தனம் கொண்ட போர்த்துக்கேயன் துணை இல்லாதான் ஈழத்தான் என துணிந்து போர் மூளத் துடிக்கிறான்.
வஞ்சக சூழ்ச்சியில் எம் வாளினை விஞ்ச விளைகிறான்.
உள்ளூர் நற்குடிகளைக் கூட்டியே நல்லூரில் கலவரம் நிகழ்த்திக் காட்டுகிறான்.
வீரத்திறன் கொண்டு பறங்கித்தலை கவிழ்க்க சித்தமாகிறோம்.
துணை உறவென துணிந்து நாம் தூதனுப்புகிறோம்.
அலைகடலென சேனை ஆழி தாண்டி வர காத்திருக்கிறோம்.

உற்ற பதிலை வேண்டி நிற்கும் நல்லுறவாய்
யாழ்ச் சக்கரவர்த்தி
சங்கிலி குமாரன்"

திருமுகத்தை வாசித்து முடித்த கோவிந்தர் கனன்று சிவந்த கண்களோடு இரகுநாத நாயக்கரை நோக்கினார்.
அத்திருமுகத்திற்கு இரகுநாத நாயக்கர் அளித்த பதிலாகவே ஐயாயிரம் வீரர்களுடன் வீரத்தளபதி வருணகுலத்தானின் சேனை ஈழத்தில் கால்பதிக்கிறது.

வருண குலத்தானின் தலைமையில் படை ஈழம் நோக்கி புறப்பட்டதுவே கோவிந்த தீட்சிதருக்கும்,
இரகுநாதநாயக்கருக்கும் வெற்றியின் முரசொலி கேட்டது போல் பெருமிதத்தை பெருக்கியது.
வருணகுலத்தானின் வீரம் வரலாற்றில் அடர்த்தியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. 'ஹெம் நாயக்'(Khem nayak)என தஞ்சாவூர் நாயக்கர் வரலாற்று நூலில் (The Nayaks of Tanjore) குறிப்பிடப்படும் நாயக்க வீரத்தளபதி வருணகுலத்தானே ஆவார்.

இவனை 'கரையாரத்தலைவன்' என சுவாமி ஞானப்பிரகாசர் தனது 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' நூலில் குறிப்பிடுகின்றார். மேலும் போர்த்துக்கேய பாதிரியாரான குவேரஸ் பாதிரியார் ( Fernando De Queyroz) எழுதிய 'Conquest of Ceylon (Temporal and Spiritual)' என்கிற நூலில் வர்ணகுலத்தானை 'Kinglet Of the careaz called VarnaGullata, a Great Enemy of the Portuguese' என கம்பீரமாக அறிமுகப்படுத்துகிறார்.
அத்தகைய மாவீரனான வருணகுலத்தானிடம் வணங்கிய கரங்களோடு நின்று சேனாதிபதி கூறினான்
' தங்களை முறைப்படி வரவேற்று நகர்வலமாய் நல்லூர்க் கோட்டைக்கு அழைத்துவர மன்னர் என்னை பணித்திருக்கிறார். நான் நல்லூர் இராசதானியின் சேனாதிபதி மகிழாந்தகன்' .

'வணங்குகிறேன் சேனாதிபதி மகிழாந்தகரே. ஈழ நாட்டில் அடி வைத்த அவசியமும் பேறும் நெஞ்சில் ஆழ பதிந்து ஆனந்தமளிக்கிறது. தங்கள் வரவேற்பும் துறைமுகத்தில் தரித்திருந்த பெரும்படையும் என்னை மேலும் ஆச்சரியப்படுத்திவிட்டன. ஏன், கொஞ்சம் அச்சமும் கொள்ளச்செய்துவிட்டன என்றே கூறலாம்' எனக்கூறி கொஞ்சமாய் சிரித்தான்.

ஆனால் மகிழாந்தகனோ அதைக் கேட்டு அலைகடலின் இரைச்சலைத்தாண்டி சிரித்தான். 'தாங்கள் அச்சப்பட்டதாக சொன்னால் ஈழத்து படை வீரர்கள் கூட யாரும் நம்ப மாட்டார்களே. தாம் வரப்போகும் செய்தியறிந்ததுமே மன்னர் முரசறிவித்தார். அன்று தொட்டு யாழ்ப்பாண மாந்தரின் பேச்செல்லாம் தங்கள் வீரத்திறன் பற்றியதே~ ஆதலால் தாங்கள் அச்சப்பட்டதாய் சொன்னால் ஈழத்தோரே அதைப் பெரிய வேடிக்கையாய்த் தான் கருதுவார்கள்' எனக் குறுஞ்சிரிப்போடு கூறினான் சேனாதிபதி.

மகிழாந்தகன் வார்த்தைகள் கேட்டு உள்ளத்தில் பெருமிதத்தில் மிதந்தான் வருணகுலத்தான். ஆயினும் அந்தப் பெருமிதத்தை அந்த சமயத்தில் வெளிக்காட்டிக் கொள்ளாமல்
' ஆயினும் மன்னர் எதற்கு இத்தனை பெரிய படையோடு




ஒரு ஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்? அதுவும் இந்த நேரத்தில் இது அத்தனை அவசியமானது இல்லையே ' எனக் கேட்டான்.

'எம்மன்னர் தங்கள் வரவுச்செய்தி அறிந்து பெரிதும் பரவசத்தில் உள்ளார். அத்தோடு மன்னர் செயலில் அர்த்தங்கள் ஆயிரம் இருக்கும். அதை தாங்களே வந்து மன்னரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாம் இப்போது கோட்டை நோக்கி புறப்படுவோம்.'
எனக் கூறிய மகிழாந்தகனின் முகத்தில் ஏற்பட்ட சிறிய அதிருப்தியை வருணகுலத்தான் அவதானித்தான்.

'மன்னரின் செயலை அநாவசியமென்றமைக்காக தாங்கள் வருத்தப்பட தேவையில்லை. என் நோக்கம் அதுவல்ல. செயலுக்கு முன் புகழை அணிந்து கொள்வது சங்கடமாக இருக்காதா? அதனால் தான் யோசித்தேன்' என மகிழாந்தகனை நோக்கி கூறினான் வருணகுலத்தான்.

தன் முகமாற்றத்தை வருணகுலத்தான் இனங்கண்டு கொண்டதை எண்ணி சிறிது கூச்சத்தோடு உள்ளத்தின் சிரிப்பை முகத்தில் காட்டி ' இது தங்கள் மீதும் தங்களின் பெரும்படை மீதும் கொண்ட நம்பிக்கையின் கொண்டாட்டமாகும் வருணகுலத்தாரே. இது மன்னரின் சந்தோசமான வேண்டுகோள் . ஆதலால் தாம் இதனை ஏற்றுத்தான் ஆகவேண்டும் ' எனக்கூறி புன்னகை புரிந்தான்.

'அப்படியானால் வாருங்கள். நாம் விரைந்து கோட்டைக்கு புறப்படுவோம்.' எனக்கூறிக்கொண்டே பெருஞ்சிரிப்போடு மகிழாந்தகன் தோள்களை அணைத்துக் கொண்டான் வருணகுலத்தான்.

அலங்கரிக்கப்பட்டு நின்ற யானையின் மேல் வருணகுலத்தான் ஏறி அமர்ந்து கொண்டான். குதிரைகள் பூட்டப்பட்ட ரதமொன்றில் மகிழாந்தகன் முன்னே செல்ல வருண குலத்தானை தாங்கி வந்த யானை தொடர்ந்து வந்தது. அத்தோடு எண்ணிக்கையிலடங்காத வீரர்களாய் ஈழநாட்டு வீரர்களும் தஞ்சை வீரர்களும் கண்ணுக்கெட்டும் தொலைவு வரை வந்து கொண்டிருந்தனர்.

அத்தனை உதடுகளிலும் ஜெயகோஷங்கள் முழங்க ஊர்வலம் கோட்டையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அந்த ஊர்வல முழக்கங்கள் பூமியின் இடிகளாய் ஒலித்தன. அச்சத்தின் ஆழ்ந்த மௌனங்கள் கூட அந்த ஓசையில் உடைந்து சிதறின.

வீதியோரங்களில் குழுமிய மக்கள் கண்கள் மலர மலர தஞ்சை வீரர்களையும், வீரத்தளபதியையும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண மக்களிடையே கடந்த சில நாட்களாய் பேசுபொருளாகி கற்பனையும் வதந்திகளும் கலந்த பிரமாண்ட உருவமாய் உள்ளத்தில் பதிந்திருந்த வீரத்தளபதி வருணகுலத்தானை நேரில் கண்டபோது அவர்களது பூரிப்பை அவர்கள் கண்களின் வழியே வருணகுலத்தானால் உணர முடிந்தது.

யாழ்நகரின் வேறுபட்ட வனப்பையும், செழிப்பையும், தாய்த்தமிழ் மக்களையும், அவர்களது கூரிய பார்வையையும் எதிர்கொண்டு மாறாத புன்னகையோடு பவனி வந்து கொண்டிருந்த வீரத்தளபதி வருணகுலத்தானை நோக்கி கூட்டத்தில் ஒரு ஈட்டி குறிவைக்கப்படுவதை அங்கிருந்த வீரர்கள் யாரும் அறிந்திருக்கவில்லை.

**ஈட்டி பாயும்...**



வைகாசி தேய்பிறை அட்டமி நாளான கடந்த 12ம் திகதி எமது சித்திராங்கதா வரலாற்று நாவலின் மன்னன் சங்கிலியனின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# தேசவழமை!

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

### தேசவழமைச் சட்டத்திற்கான அறிமுகம்...

இன்று நாம் உச்சரிக்கும் இலங்கை எனும் பதம் மிகச்சிறிய கால வரலாற்றை கொண்டது. இது காலணித்துவத்தின் கீழான காலத்தின் விளைவாக உருவாகிய ஒன்றாகும். ஆனால் இன்றைய இவ்இலங்கை எனும் பதம் பிறக்க பல நூற்றாண்டுகள் முன்னர் இந்த இந்து சமுத்திரத்தின் சிறிய தீவானது பல்வேறு சுதேசிய இராசதானிகளின் பிறப்பிடமாகும்.

அன்று இந்தச் சிறிய தீவு தன்னுடைய எல்லைப்பரப்பை அவ்விடம் வாழ்ந்த மக்களின் கூட்டமாக ஓர் கட்டமைக்கப்பட்ட ஆட்சிமுறையின் கீழே இறைமையை இறைவனிடம் இருந்து பெற்ற முடியாட்சிகளின் கீழ் ஆண்டு கொண்டிருந்தன. அந்த அரசுகள் தம் மக்களை தமக்கென ஒரு சுயத்துடனும் தத்தமது கலை கலாசார வாழ்க்கை நெறியுடன் பாரிபாலனம் செய்து கொண்டிருந்தன.

வடக்கே யாழ்ப்பாண இராசதானி, மேற்கே கோட்டை இராசதானி, மத்தியில் கண்டி இராசதானி எனும் காலணித்துவ ஆட்சி காலத்திற்கு முன்பான ஒரு காலத்திற்கான பயணம் தான் தேசவழமையின் வேர்களை காண்பதற்கான தேடலை வலுப்படுத்தும். இந்தச்சட்டங்களின் பிறப்பைத் தேடுவது மிகவும் கடினமானது. ஆனாலும் ஒரு பயணம்!

கி.பி 1619களிற்கு முன்னரான காலம், இன்றைய இலங்கையின் வடபகுதியில், தமிழர் பூர்வீக நிலத்தில் தமிழர்களை கொண்ட தனியான நாடு இருந்தது. இதுவே யாழ்ப்பாண அரசு அல்லது யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்படுகிறது.

முடியாட்சி முறையின் கீழ் ஆளப்பட்டுவந்த யாழ்ப்பாண இராச்சியத்தில், சட்டம் ஒழுங்கு முதலியவை எழுத்து வடிவில் இல்லாத போதும், பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த ஒரு செயற்பாட்டுக் கட்டமைப்பு முறைமை இருந்திருக்கிறது. இதனை நாம் அன்றைய மக்களின் வழக்காறுகள் என விளிக்கலாம். இந்த நடைமுறைகள் காலம் காலமாக செவிவழியாக அடுத்த சந்ததிக்கு கடத்தப்பட்டவை. இதனை இன்றைய நிலையில் சொன்னால் ஒரு அன்றைய காலத்து சட்டமுறைமை என்றும் சொல்லலாம்.

தேசவழமை என்ற சொல்லானது குறித்த இடத்தின் அல்லது குறித்த பிரதேசத்தின் வழக்காறுகள் எனப் அறியப்படுகிறது. இலங்கையின் தேசவழமை என்பது யாழ்ப்பாண தமிழர்களின் வழக்காறுகள் என பார்க்கப்படுகின்றது. இந்த வழக்காறுகள் காலம் காலமாக இருந்த தமிழர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை. இவை தான் அன்றைய இந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் அடிநாதமாக காணப்பட்டது என்றால் மிகையாகாது.

கி.பி 1619இல் போத்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றித் தங்கள் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த பின்னரும், போர்த்துக்கீசர்கள் சட்டங்கள் மற்றும் நீதித்துறை போன்றவை பற்றிய சிந்தனைகளை விதைக்காது, அவர்கள் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் முதலியார்கள் ஊடாகவே மக்களைக்கட்டுப்படுத்தி வந்தமையால் பழைய நடைமுறைகளே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டன.

பின்நாட்களில் யாழ்ப்பாண இராசதானி போத்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர்களிடம் கைமாறியது. எனினும், முன்னர் போலவே மரபு வழியான விடயங்கள் எல்லாவற்றிலும் பழைய நடைமுறைகளே அதாவது அந்த வழமைகளே பின்பற்றப் பட்டதாகத்தெரிகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் ரோம டச்சுச்சட்டம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டாலும், அவர்களால் தேசவழமையை புறத்தொதுக்க முடியவில்லை. தற்போது ரோம டச்சு சட்டம் இலங்கையின் பொதுச்சட்டமாக இருக்கின்ற போதிலும் தமிழர்களின் வழக்காறுகள் மீதான பற்றுறுதி காரணமாக தேசவழமை, உயிரோட்டமாக இன்றுவரை நிலை கொண்டுள்ளது!

இன்றைய இலங்கையின் சட்டங்கள் மற்றும் நீதித்துறை போன்றவை ஒல்லாந்தர்களின் ஆட்சியின் விளைவாக இம் மண்ணில் விதையிடப்பட்டவை. காலணித்துவ காலத்தில் சட்டம் மற்றும் நீதித்துறையில் பல எண்ணிலடங்கா மாற்றங்களை விதைத்த ஒல்லாந்தர்களுக்கும் தேசவழமைக்கும் மிகப்பெரிய தொடர்பு உண்டு.

எழுத்தில் இல்லாமல் வெறுமனே செவிவழியாக இருந்த தேசவழமை எனும் யாழ்ப்பாண மக்களின் வழக்காறுக் கோவையானது 1707ஆம் ஆண்டு ஒல்லாந்தர்களால் பிரகடனம் செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் சைமன்ஸ் என்ற ஆளுனரால் இந்த மக்களின் வழக்காறுகளை விசாரித்து எழுத்தில்

தயாரிக்க உத்தரவிட்டார். டச்சு மொழியில் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம் பின்னர் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த பன்னிரண்டு முதலியார்களுக்கு அவர்களின் பரிசீலனைக்கு என வழங்கப்பட்டது. முதலியார்கள் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற வழமையுடன் இக்கோவை இணங்கியிருப்பதாக உறுதிப்படுத்தினார்கள்.

விளைவாக 1806ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க தேசவழமை ஒழுங்குவிதி விதந்துரைப்பு செய்வது 1706ஆம் ஆண்டின் ஆளுனர் சைமன்ஸ் என்பவரது கட்டளைப்படி ஒன்று சேர்க்கப்பட்டவாறானவையே தேசவழமை என ஏற்பாடு செய்கின்றது. இதன்படி யாழ்ப்பாண மாகாணத்தமிழர்களின் தேசவழமைக்கு வலுக்கொடுப்பதற்கான ஒழுங்கு விதி என்று கூறப்படுகிறது.

இந்த யாழ்ப்பாண மாகாணம் என்பதால் கூற வருவது என்ன? யார் யாரெல்லாம் தேசவழமையால் ஆளப்படுகிறார்கள்?? தேசவழமையின் எல்லைகள் அதன் திரிபுகள் அதன் திருத்தங்கள் என்பன பற்றி அடுத்த சட்டத்தின் சாரல் பகுதியில் தேசவழமையின் ஏற்புடமை மற்றும் பிரயோகம் பற்றிய தேடலாக அமையும்.

தேசவழமை ஒழுங்கு விதியை தொடர்ந்து, பின்னைய காலப் பகுதியில், 1911ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள்' கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டம் தேசவழமையால் ஆளப்படுகின்ற திருமண உரிமைகள் தொடர்பான சட்டத்தினை திருத்துவதாக கொள்ளப்படுகிறது.

இதன்படி யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளை சட்டத்தின் 40ஆம் பிரிவானது தேசவழமையின் வழக்காறுகளுடன் இந்த புதிய கட்டளை சட்டம் முரண்படுமிடத்து வழக்காறுகள் நீக்கப்பட்டதாக கருத வேண்டும் என்று கூறப்படுகிறது.

1947ஆம் ஆண்டு 59 ஆம் இலக்க தேசவழமை முன் வாங்குரிமைக் கட்டளைச்சட்டமானது கூட்டுச்சொந்தமாக உள்ள அசையா ஆதனம் விற்கப்படும் போது அத்தகைய ஆதனத்தின் முன்வாங்குரிமை அதாவது முன்னுரிமை பற்றி ஏற்பாடு செய்கின்றது.

ஆகவே தேசவழமை தொடர்பாக பின்வரும் சட்டங்கள் காணப்படுகின்றன,

1- தேசவழமை ஒழுங்கு விதி

2- யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச்சட்டம்

3- தேசவழமை முன்வாங்குரிமைக் கட்டளைச்சட்டம்

இவைகளே அன்றைய தமிழர்களின் வழக்காறுகளை இன்றைய காலத்தில் ஒரு கட்டமைப்புக்குள் நிலை நிறுத்தி அந்த வழக்காறுகளுக்கு வலுச்சேர்ப்பவையாக அமைகின்றன.

தேசவழமை என்பது ஒரு சாதியினருக்கோ ஒரு மதத்துக்கோ உரிய வழமையல்ல, அது இந்த தீவிலுள்ள யாழ்ப்பாண மாகாண தமிழர்களிற்கு சாதி அல்லது மத வேறுபாடின்றி பொதுவானதாக பிரயோகிக்கப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் தேசவழமையை இல்லாதொழிக்க குரலெழுப்பப்பட்டிருப்பினும் இது அறியாமையின் வெளிப்பாடே. ஆகக்கூடியதாக இந்த சட்ட ஏற்பாடுகளையே நீக்க முடியும். மாறாக வழக்காறுகளை எவரால் அசைக்க முடியும்? காரணம் இந்த வழக்காறுகள் கால காலமாக தமிழர்களின் வாழ்வியலில் ஒன்றிணைந்து பின்னிப் பிணைந்தவை ஆகும்.

தமிழர்களின் வழக்காறுகளை ஒரு சட்ட ஏற்பாடுகளாக ஆக்கிய சட்டங்கள் இல்லாதொழிக்க படினும் வழக்காறுகள் தொடர்ந்து நிலை பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!!.

**சாரல் தூறும்.....**




**இவ்வாரம் படம் சொல்லும் கதை**

# யார் இந்த கபிலர்?

விக்கி சாரங்கன்

வேள்பாரி நாவலை வாசிக்க தொடங்கிய பின் பல்வேறு தேடல்கள் எழ தொடங்கியது. நாவல் புனைவிலக்கியம். வரலாற்று புதினம் வேள்பாரி சங்க இலக்கிய செய்யுள்களை அடிப்படையாக கொண்டு புனையப்பட்டது. இந்த புனைவில் வந்து கதை நகர்த்தும் ஒரு இயங்குநிலை பாத்திரம் கபிலர்.

யார் இந்த கபிலர்?

வேள்பாரி நாவலிலே பாரியின் உற்ற நண்பன். திசை வேளாரின் நண்பன். மூவேந்தர்களால் மதிக்கப்பட்டவர். பாரியின் தரப்புநிலை நிலை மான் கோல் சொல்லி வட வேங்கடம் தென்குமரியாயின் என விரிந்த தமிழ் தேச சஞ்சாரம் செய்த பெருங்கவி. அங்கவை, பொற்கொடியின் ஆசான் இவ்வளவும் கபிலர் பற்றிய தேடலுக்கு வித்திட்டது.

90களில் பிறந்த குழந்தைகளுக்கு தமிழ் திரைப்படம் ஒன்றில் கதாநாயகன் நூறு பூக்களை பட்டியலப்படுத்துவது ஆச்சரியம் தந்திருக்கும். கபிலரை பற்றி சொல்லவந்தவன் திரைக்கு ஏன் போகிறான் என யோசிக்கிறீர்கள், புரிகிறது. அப்படி ஒரேமூச்சில் கவி அமைத்து வைத்திருந்தவன் தான் நம் தேசமெங்கும் உலாவிய கவி கபிலர். மலையையும் நெய்தலையும் முல்லையையும் மருதத்தையும் தன் பயணங்களால் கண்டு ரசித்து இயற்கையின் ஒவ்வோர் அசைவையும் தன் கவிக்குள் புகுத்திய இயற்கை கவிஞன் கபிலர்.

தமிழ் இலக்கியப்பரப்பில் ஔவை என்ற பெயர் ஒர் தொடர்சியாக வந்திருக்கிறதோ அது போலவே கபிலர் என்ற பெயரும் தொடர்சியாக வந்திருக்கிறது. பாரியின் உற்ற நண்பரான கபிலருக்கு முன்னும் பின்னும் கபிலர் என்ற பெயரில் புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

தேசமெங்கும் அலைந்து திரிந்து இயற்கையின் வனப்பை கவியாக்கிய புலவர் பாடிய பாடல்கள் 278 என்கிறார் உ.வே.சாமிநாதையர். இதனுள் இன்னாநாற்பதின் 41 பாடல்களும் அடங்குகின்றது. அதைக் கழித்து பாடல்களை குறிப்பிடுவோரும் உண்டு.

கபிலர் பாடிய புறநானூற்று படைப்புகளை வைத்தும் அவரோடு சம காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பாடிய பாடல்களை வைத்தும் கபிலர் அந்தணர் குலத்தவராக கருதப்படுகிறார். இங்கே இது வேள்பாரி நாவலில் முரண்படுகிறது. இது சார்ந்த செய்திகள் ஏதும் நாவலில் இடம்பெறவில்லை. கபிலர் தன்னை அறிமுகம் செய்யும்

"பனி வரை நிவந்த பாசிலைப் பலவின் கனி கவர்ந்து உண்ட கரு விரற் கடுவன் செம் முக மந்தியொடு சிறந்து, சேண் விளங்கி, மழை மிசை அறியா மால் வரை அடுக்கத்துக், கழை மிசைத் துஞ்சும் கல்லக வெற்ப! நிணம் தின்று செருக்கிய நெருப்புத் தலை நெடு வேல், களம் கொண்டு கனலும் கடுங்கண் யானை, விளங்கு மணிக் கொடும் பூண், விச்சிக்கோவே! இவரே. பூத் தலை அறாஅப் புனை கொடி முல்லை நாத் தழும்பு இருப்பப் பாடாது.ஆயினும், 'கறங்கு மணி நெடுந் தேர் கொள்க! எனக் கொடுத்த பரந்து ஓங்கு சிறப்பின் பாரி மகளிர் யானே, பரிசிலன், மன்னும் அந்தணன், நீயே, வரிசையில் வணக்கும் வாள் மேம்படுநன் நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி~சினப் போர் அடங்கா மன்னரை அடக்கும் மடங்கா விளையுள் நாடு கிழவோயே.." என்ற செய்யுளும்,

"அந்தனன் பலலன் கொண்டுவந்தனனே" செய்யுள்களும்

கபிலரின் சமகால புலவரான மறோகத்து நப்பசலையார் பாடிய, "புலனழுக்கற்ற அந்தணாள்.." என்ற செய்யுளும் இதனை உறுதிசெய்கிறது. சாதிபேதமற்ற வொழுக்கமும் களவொழுக்கம் நிலவிய சங்க சமூகத்தில் அந்தணன் என்ற சொல் எதைக் குறிக்கிறது என்பது ஆய்விற்குரியது.

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் கல்லிசை வாய்மொழிக் கபிலன்." (அகம் 78) என நக்கீரரும்,

"உவலைக்கூராக் கவலையி னெஞ்சின் கனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்.." என பெருங்குன்றூர்கிழாரும்,

"செறுத்த செய்யுட் செய்செங் நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம் 53) என பொருந்திலிளங்கீரனாரும் கபிலர் பற்றி குறிப்பிட்ட புகழ்மொழிகளாகும்.

பத்துப்பாட்டில் அடங்கியுள்ள குறிஞ்சிப்பாட்டு கபிலரின் இயற்கை படைப்பிற்கும் தமிழ்தேசமெங்கும் அலைந்துதிரிந்து தேசக்கவி செய்ததற்கும் சான்று. தமிழ்தேசத்தின் புவியியல்... மானிடவியல் அம்சங்களை தன் எழுத்தாணியால் வரைந்திருக்கிறான் பெருங்கவிஞன்.

இன்நூலுக்கு இன்னோர் சிறப்புண்டாம் பாண்டியனால் சிறைப்பிடிக்கப்பட்ட ஆரிய மன்னன் பிரகதத்தனுக்கு தமிழ் அறிவிக்க பாடியது.

கபிலர் பாரியையும் அவன் மலை வளத்தையும் அவன் கொடையும் வீரத்தையும் பாடிய செய்யுள்கள் சங்க இலக்கியங்களில் புதைந்துகிடக்கிறது.

பாரியின் மலைவளத்தை,
"அளிதோ தானே, பாரியது பறம்பே!
நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்,

உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு லீழ்க்கும்மே
நான்கே, அணிநிற ஒரி பாய்தலின், மீது அழிந்து,
திணி நெடுங் குன்றம் தேன்சொரி யும்மே.
வான் கண் அற்று, அதன் மலையே வானத்து
மீன் கண் அற்று, அதன் சுனையே ஆங்கு,
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்,
தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன்
யான்அறி குவென், அது கொள்ளும் ஆறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின் வர,
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கு ஈ யும்மே..” என்ற செய்யுளும்

அவன் வீரத்தை பாடும்,
“கடந்து அடு தானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும், பறம்பு கொள்றகு அரிதே
முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே.” என்ற செய்யுளும்

“நல்லவும் தீயவும் அல் குவி இறைப்ப
புல் இலை எருக்கம் ஆயினும் உடைய....” என்ற
செய்யுளும் முக்கியமானது.

பாரியின் பிரிவை நினைத்து பாடிய,
“கலை உணக்கிழிந்த யான் மேயினேன் அன்னமாயனே
அயின்.......” என்ற செய்யுளும் தேடலில் கிடைத்தது.

பாரியின் பறம்பு மலை மூவேந்தர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் பாரி மகளீரை அழைத்துச்சென்ற கபிலர் அவர்கள் பார்ப்பன சேரியில் வைத்து திருமணம் முடித்து வைத்ததும் அதன்பின் வடக்கிருந்து உயிர்நீத்ததாக கூறப்படுகிறது.

“யாரோடும் பகை கொள்ளலன் என்ற பின் போரொடுங்கும் புகழொடுங்காது” என கம்பன் எழுத்தாணி வரைந்தது போல கபிலரின் கவிவரிகளால் பாரி மன்னன் தமிழர்களிடம் புகழொடு நடமாடுகிறான்.

குறிஞ்சிப்பாடல் மலர்களை கவியாக்கிய “ஒன்செல்வேந்தன் அரும்பல் இனிக்கும். தன்பையக் குவளை குறிஞ்சி..” என்ற பாடல் பெருங்கவிஞனுக்கு இயற்கைமீதிருந்த தீராக்காதலுக்கு சான்றாக அமைகிறது.

# நட்பு

பாஹம்சனா
பருத்தித்துறை

என் ஆருயிர் தோழியே
நம் நட்பின் ஆழத்தை
கவியால் எழுத முனைந்த போதுதான்
உணர்ந்தேன்
கடவுளுக்கே கிடைக்காத
தோழியை நான் பெற்றேன்

இரமனின் வனவாச காலத்தையும்
தாண்டிய நம் நட்பு
இன்றும் உயிர்ப்புடனே

என் வாழ்வின் துயரிற்காய்
என் குறைகளை நிவர்த்தி செய்ய
என் சந்தோசத்திற்காய்
உன் சந்தோசத்தை புதைத்தாய்

எனக்கான பாதையை
எனக்கான வெளிச்சத்தை
எனக்கான ஊன்றுகோலாய்
நீ வெற்றியிலும் தோல்வியிலும்
என்னுடன் பயணித்தாய்

எத்தனையோ சண்டைகள்
எவ்வளவோ புன்னகை
எவ்வளவோ அழுகை

அனைத்தும் உன்னுடன்

உன்னுடன் எவ்வளவோ கோபங்கள்
தாபங்கள் சண்டைகள் போட்டாலும்
மறுகணமே உன்னைத் தேடி வந்தவள்
நான்

எத்தனையோ உறவுகள்
எத்தனையோ நண்பர்கள்
உனைத் தேடி வந்தாலும்
என் போன்று உனை சுற்றி
வந்தவர்கள் யாருமில்லை
என திமிராக சொல்வேன்

காதலுக்கு மட்டும் தான் துடிப்பென்று
சொன்னவர்கள் பலர்
நான் சொல்கிறேன் இல்லை
காலம் மாறலாம்
பாதைகள் மாறலாம்

பயணங்கள் திசை மாறி நீளலாம்
நட்பின் துடிப்பு இதையும் தாண்டி
உயிருள்ளவரை வாழும்

உன் மீது நான் கொண்ட நட்பின்
ஆழம் வடிக்கஇதன் பின் என்னால்
முடியவில்லை
கண்கள் குளமாகிறது
மெய் சிலிர்க்கிறது

இதயத்தில் நான்கு அறையாம்
அதில் ஒன்று என் தோழிக்கு
என்னால் நீ பெற்றது என்னவோ
காயங்கள் மட்டும்தான்

கண்ணீருடன் எழுதுகிறேன்
என் நட்பு உண்மையானது
உடலில் உயிருள்ளவரை
உன் நினைவுகள்
என்னுள் பொக்கிசமாய்

உண்மை நட்பு
உறங்காது என்றும் உயிர்துடிப்புடனே

மருத்துவம் போற்றுதும்

# இன்சுலினும் உடல் நிறையும்

சுகுமாரன் சுஜன்.
3ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

மனித உடலின் இருதயத்துடிப்பு வீதம், சுவாச வீதம், உடல் வெப்ப நிலை, உடல் நிறை இவைகள் எல்லாம் அவ்வளவாக மாற்றம் அடையாது, ஒரு குறிப்பிட்ட நிலையிலே பேணப்படுகிறது என்றால், உடலின் மூளை, நரம்புகள், ஹோர்மோன்கள் எனப்படும் இரசாயனங்கள் இவைகள் எல்லாம் ஒன்று சேர இயங்கிக்கொண்டு இருக்கிறது என அர்த்தம். எனவே இந்த ஹோர்மன்கள் எனும் இரசாயனங்களில் ஏற்படும் சிறிய மாற்றம் பாரிய விளைவுகளை கொண்டுவரும். அதனுடைய ஒரு விளைவுதான் அதி உடல் நிறை.

உடலிலே உணவு மூலம் சக்தி உள்ளெடுக்கப்பட்டு, வெப்பமாக வெளியேறுகிறது. உள்ளெடுக்கப்படும் சக்தியும் வெளியேறும் சக்தியும் சம அளவில் இருப்பின் உடல் நிறை மாற்றம் அடையாது. ஆனால், வெளியேறும் சக்தியை விட உள்ளெடுக்கும் சக்தி அதிகமாக வரும் வேளையில், மேலதிக சக்தி கொழுப்பாக மாற்றப்பட்டு, உடலின் "அடிப்போஸ் டிசு" எனப்படும் அங்கத்திலே சேமிக்கப்படும். எனவே அடிப்போஸ் டிசு என்பது மேலதிகமாக சேரும் கொழுப்பை சேமிக்கும் ஒரு அங்கம். ஆனால் அதை விட முக்கியமாக, உடலின் மிக முக்கியமான ஹோர்மோன்களை சுரக்கும் அங்கம் இது தான். எனவே அடிப்போஸ் டிசுவிலே மேலதிக கொழுப்பு சேர சேர, அடிப்போஸ் டிசு அதனுடைய தொழிற்பாட்டை இழக்கும். தேவையான ஹோர்மோன்களை சுரக்காமல் விடும். தேவையற்ற ஹோர்மோன்களை சுரக்கும். இதன் விளைவாக நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்டிரோல் அதிகரிப்பது போன்ற பாரிய விளைவுகள் ஏற்படும்.

நண்பர்களே! உடல் நிறையை குறைக்க ஒவ்வொருவரும் போராடிக்கொண்டு இருக்கிறோம். உடற்பயிற்சி செய்கிறோம், ஜிம் செல்கிறோம், பல மருந்துகளை உண்கிறோம். ஆனால் இவைகளிற்கு மேலாக, முதலிலே உடல் நிறை எவ்வாறு அதிகரிக்கிறது? உடல் நிறை குறையும்போது உடலிலே என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதை எப்போதாவது அறிந்திருக்கிறீர்களா?

இப்போது ஒரு முக்கியமான கேள்வி! அப்படி எந்த ஹோர்மோன் எங்களின் உடல் நிறைக்கு காரணமாக அமையும்?. பதில் பல ஹோர்மோன்கள் உள்ளன. ஆனால் மிக முக்கியமானது இன்சுலின். இன்சுலின் என்பது உண்மையாக நீரிழிவோடு மாத்திரம் தொடர்பு பட்ட ஹோர்மோன் அல்ல. உடல் நிறைக்கு காரணமான ஹோர்மோனும் அதுதான். அதாவது சுருக்கமாக கூறின், குருதியில் இன்சுலின் அளவு அதிகரிக்கும் போது உடல் நிறை அதிகரிக்கும்.

இப்போது, எந்த எந்த சந்தர்ப்பங்களில் இன்சுலின் அளவு அதிகரிக்கும் என பார்க்க முதல், இன்சுலின் என்றால் யாது என அறிவோம். நாங்கள் உண்ணும் உணவில் பிரதானமாக மாப்பொருள் , கொழுப்பு, புரதம் இருக்கிறது. இவைகள் சமிபாட்டு தொகுதியில் சிறிய கூறுகளாக உடைக்கப்பட்டு குருதியிலே அகத்துறுஞ்சப்படும். அவ்வாறு இவைகள் குருதியிலே நுளையும் போது, சதையி எனப்படும் வயிற்றிலே இருக்கின்ற அங்கம் மூலம் இன்சுலினை தூண்டி விடும்.

இவ்வாறு தான் இன்சுலின் சுரக்கிறது. இப்போது எந்த எந்த சந்தர்ப்பங்களில் இன்சுலின் குருதியிலே அதிகரிக்கிறது என பார்க்கலாம். ஒன்று, type 2 diabatic mellitus (நீரிழிவு). இரண்டு, எந்த நேரமும் உணவு உண்பது. இவற்றில் நான் இரண்டாவதாக கூறிய விடயம் மிக முக்கியமானது. அதாவது நான் மேலே கூறியது போன்று, உணவு உண்ணும் போது இன்சுலின் தூண்டப்படும். எனவே எந்த நேரமும், அடிக்கடி உணவு உண்ணும் போது, குருதியில் இன்சுலின் இருந்து கொண்டே இருக்கும். இன்சுலின் குருதியில் அதிகமாக இருந்தால், உடலிலே மேலதிகமாக சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பு உடையாது. கொழுப்பு உடையா விடின் உடல் நிறை குறையாது. உண்மையாக இதுதான் விரத முறைக்கு பின்னுக்கு இருக்கின்ற விஞ்ஞானமும் கூட. அதாவது உணவு உண்பதை தவிர்க்கும் போது, குருதியிலே இன்சுலின் அளவு குறையும். எனவே கொழுப்பு உடையும். உடல் நிறை குறையும்.

இன்னுமொரு முக்கியமான விடயம் என்னவென்றால், உடல் நிறையை குறைக்க போராடும் பலரும் செய்யும் மிகப்பெரிய தவறு என்னவென்றால், அவர்கள் உள்ளெடுக்கும் உணவின் அளவை குறைக்கிறார்களே தவிர, எந்த உணவை குறைக்க வேண்டும் என்ற விடயத்தில் தவறு விடுகிறார்கள். அதாவது இப்போது உணவின் அளவை குறைக்கும் பலரும் கொழுப்புத் தான் உடல் நிறைக்கு காரணம் என நினைத்து, கொழுப்பை குறைப்பதாக கூறி இறைச்சியை தவிர்த்து விட்டு சோறு, றொட்டி, பிட்டு என மாப்பொருள் நிறைந்த உணவை அதிகம் உண்பார்கள். உண்மையாக இது தவறான வழிமுறை. காரணம் முதலாவது விடயம், நாம் என்ன உணவை உட்கொண்டாலும் கொழுப்பு, புரதம், மாப்பொருள் எதுவாயினும், இறுதியாக கொழுப்பு என்ற வடிவிலே மாற்றப்படும். இரண்டாவது விடயம் என்னவென்றால் கொழுப்பு, மாப்பொருள், புரதம் என்பவற்றை சம அளவில் எடுக்கும் போது இவை மூன்றுமே இன்சுலினை தூண்டிய போதிலும், மாப்பொருளே மிக அதிகமாக இன்சுலினை தூண்டும். ஆக இன்சிலின் அதிகமாக தூண்டப்படின், கொழுப்பு உடைய மாட்டாது. உடல் நிறை குறைய மாட்டாது. எனவே எங்கள் உடல் நிறையை குறைக்க சரியான சிறந்த வழி மாப்பொருள் நிறைந்த உணவை குறைத்தலே ஆகும்.

இதை விட முக்கியமாக நண்பர்களே, உடல் பயிற்சி செய்வதால் நூறு நன்மைகள் இருக்கிறது. ஆனால் உடல் நிறையை குறைப்பதில் உடல் பயிற்சிக்கு அவ்வளவு பங்களிப்பு இல்லை. அதற்கு பின்பும் ஒரு விஞ்ஞானம் இருக்கிறது. அதை இன்னுமொரு பதிவிலே பார்ப்போம்.

# ஒற்றைக்காலில் மனிதம்!

மனிதம் பேசுகின்றது
மங்கிய வாழ்வுதனை
உணர்வு காட்டுகின்றது
உள் மனதின் ஆழம்தனை

கஞ்சா இருப்பதால் தினமும்
கலையவில்லை போதை
பேதையை பார்ப்பவரிடையே
பேரின்ப நிலையின் மாயை

களவாடி வாழ்வாரும்
கள்ளுண்டு தாழ்வாரும்
வாழவே இப் பூமியது
வாய்ப்பளித்தது ஏனோ

கொடூர அரக்கர்களின்
கொடும் பாவங்களினால்
வீதியோரம் அலைகின்ற
வீறு கொண்டு அழும் மழலைகள்

வீசப்பட்ட அவற்றுக்கு தெரியுமா
விபரீத உலகம் இதுவென்று

நேர்மை வழி வாழ்பவர்கள்
நேயமற்ற சூழலில் புறக்கணிக்கவே
ஏழ்மை வந்து விடிவின்றி தாக்கவே
ஏக்கமது வாட்டி வதைக்கின்றது

ஆணவ மனம் படைத்தவர்களின்
ஆதிக்கம் தலை தூக்கி ஆடுகின்றது

பாதக செயல்கள் குறையும் வரை
பார் உயர்வதை யார் காண்பார்

சகிப்பு தன்மையால்
சமாதானம் வாழ்ந்திடுமா

நல்வளம் ஓங்கிடவே
நல்லனவற்றை செய்வோம்

மனிதாபிமானம் மாண்டுடாமல்
மலரவே இவ்வுலகுதனை மாற்றுவோம்

~ நயினை இனியா~



யதுஷா தேவகாந்




பிள்ளையார்

1. முதலாவதாக வணங்கும் கடவுள் இவரே.
2. இவரை வணங்கியே எக்காரியங்களையும் செய்வோம்.
3. தும்பிக்கை இருப்பதால் தும்பிக்கையான் என்பர்.
4. இவரிற்கு கணபதி, விநாயகர், ஐங்கரன், விக்கினேஸ்வரன் என பல பெயர்கள் உண்டு.
5. விநாயகரை தோப்புக்கரணம் செய்து வழிபடுவோம்.
6. புலம் பெயர் தேசத்தில் வாழ்ந்தாலும் வழிபாடுகளை நாம் மறவோம்.

«கடவுளை நம்பினோர் கைவிடப்படார்»



சசீந்திரராஜன் அஸ்வினி
Cm2
பிரான்ஸ்




எனது பாடசாலை.

எனது பாடசாலையின் பெயர்: [illegible].

இது ஒரு ஆரம்பபிரிவு பாடசாலை.

இங்கே CP, CE1, CE2, CM1, CM2 என 5 வகுப்புகள் உண்டு.

பாடசாலையில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளனர்.

ஒவ்வொரு வகுப்பிலும் கரும்பலகை, மேசைகள், இருக்கைகள், பேனைகள், பென்சில்கள், நூல்கள் போன்றவை உள்ளன.

ச.றோஸ்மினி

சசீந்திரராஜன் றோஸ்மினி
Ce1, பிரான்ஸ்.



சசீந்திரராஜன் யஸ்மினி
Ce1, பிரான்ஸ்.

நான் யஸ்மினி.
எனக்கு 8 வயது.
நான் பிரான்சில் வசிக்கிறேன்.
நாங்கள் இரட்டையர்கள் எனக்கு அண்ணாவும் அக்காவும் உண்டு.
நான் பிரான்சு பாடசாலையில் CE1 வகுப்பிலும், தமிழ் பாடசாலையில் வளர் நிலை 1 இலும் கல்வி கற்கிறேன்.
எனக்கு கல்வி கற்பது மிகவும் பிடிக்கும். S. யஸ்மினி




பிரதீபன் கஸ்வினி
மலைமதி முன்பள்ளி,
கந்பொக்கணை, உடுவில்

# மின்மினி

ஷாதிர்

இராப்பொழுதுகளில் மின்மினிப்பூ ச்சிகள் ஆன்லைனில் உலாவரும் ஓர் இடம் தான் நான் இன்னும் வசித்து வரும் ஆண்கள் விடுதி. ஊரிலிருந்து வந்திறங்கி காலை 2.00மணி போல் விடுதியினுள் சப்வார்டனுக்கு தெரியாமல் உள்நுழைய மிகுதிக்காசுக்கு வாங்கி வரும் சொக்லட்கள் தான் காவலாளிக்கு கொடுக்கும் இலஞ்சம். பிரதான வீதியிலிருந்து விடுதி சுமாராக நூறுமீற்றர் தூரம் தான். பகலில் கூட பாதையின் இருமருங்கிலும் இருக்கும் தேயிலைத்தோட்டங்களில் வசிக்கும் கபரகொயா மற்றும் பாம்புகளுக்கு சிக்னல் லைட்டுகள் இருப்பதில்லை. ஆனாலும் நான் மின்மினிப்பூ ச்சிகளுக்கு கலைஞன் தான். இருளில் எவ்வாறு ஒளிர்வது எனும் வாழ்க்கைப்பாடம் கற்றுத்தருபவை அவை.

இங்கு வந்த பிறகு பல சமயங்களில் தொலைபேசியில் என்னை அடையமுடியாமல் இருப்பதற்கான காரணம் அப்பாவுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதற்கான காரணம் கறுப்புநிற குட்டைப் பாவாடை, மாம்பழ நிறத்திலான ரவிக்கை, கலைந்த முடி, தோளில் மூன்று புத்தகங்களும் பென்சில் பாக்ஸ் அடங்கலாக காலையில் கன்டீனில் நின்று கொண்டிருக்கும். ஒருமுறை அவளுடன் படம்பார்க்க சென்றிருந்தேன். மொட்டையான நடிகன் ஒருவன் படத்தின் கிளைமேக்ஸில் காரில் பறக்கும் ஹெலிகாப்டரை கட்டி இழுப்பான். என் மூக்குக் கண்ணாடிக்கு மேலாக திரீடி கிளாஸை சமநிலையில் வைக்க நான் பட்ட சிரமமெல்லாம் அவளுக்காகத்தான். எனக்கு ஆங்கிலம் அவ்வளவாக தெரியாது. அதே நேரம் அந்த படத்தில் பேசியது ஆங்கிலமா என்ற ஹைப்போதெடிகல் கேள்வி இன்னம் மனதிலிருந்து அகன்ற பாடில்லை. ஒருதரம் கூடைப்பந்து விளையாட பெண்கள் இல்லை என்று நாங்கள் கூடச்சென்று விளையாடி இருக்கிறோம். சனிக் கிழமைகளில் கொழும்புக்கு சென்றுவிடுவோம். நான் என் வீட்டில். அவள் அவளுடைய வீட்டில். பெரிதாக பேசிக்கொள்ள மாட்டோம். 'எங்கேயாவது போவோமா? என்று வரும் குறுஞ்செய்திக்காக மனம் கானல் நீரைக்கண்ட குழந்தை போல அலைபேசியைப் பார்த்துப்பார்த்து ஏமாறும். நிறைய ஆங்கிலத்தில் தான் பேசுவாள்.அவளின் லம்போகினி வேகமான ஆங்கிலம் எனக்கு புரியவில்லை என்று அவளறிய நிறைய நேரம் எடுக்காது. கிராமத்தில் இருந்து வந்த எனக்கு இதுவெல்லாம் சிம்ம சொப்பனம் தான்.

நான் அவளை எப்போதும் வெறுக்கவில்லை. வெறுத்ததாக ஞாபகம் கூட இல்லை. ஒருவேளை அவள் என்னை வெறுத்திருக்க வாய்ப்பிருக்கிறது. சிற்றூரான் சின்னப்புத்திக்காரன் என்று என் அம்மா சொல்லுவதை நான் சிலவேளைகளில் நிரூபித்திருக்கலாம். அதற்கு நான் பேசும் ஆங்கிலம் கூட காரணமாக இருந்திருக்கலாம். எப்போதாவது பார்டிகளில் சிறிது வைன் குடிப்பாள். எப்போதும் சிரிக்கும் அவள் முகம், ஆச்சர்யத்துடன் பார்க்கும் விழிகள், உயரும் புருவம் என அவளிடம் வியக்க வைக்க பல விடயங்கள் இருக்காமலும் இல்லை.

நான் மோட்டார் சைக்கிள் எடுத்து சென்ற வாரம் அது. விடுதிக்கு செல்ல வேண்டும். டிராப் பண்ண முடியுமா?' என்று கேட்டாள். என் பழையமோட்டார் சைக்கிள் அன்றுதான் பிறவிப்பயனை அடைந்தது. நிறைய ஆங்கிலப்படம் பார்ப்பாள். அவளுடன் பேச கண்டன்ட் வேண்டுமே என நான் பார்த்த ஆங்கிலப் படங்கள் தான் அதிகம். அந்த செமஸ்டரின் கடைசி எக்ஸாம் முடிந்த நாள் அன்று. என் மனக்குமுறலில் அவள் மீதான பிரியப்பட்சிகளை கூண்டைத்திறந்து பறக்கவிடலாம் என சென்றிருந்தேன். பகலுணவு நேரம் கம்பஸிற்கு வெளியே இருந்த வாங்கில் அமர்ந்து அவள் அழ, அவளைச்சூழ தோழிகள் ஆறுதலளிப்பதாக ரூம்மேட் சொல்ல திரும்பி வந்துவிட்டேன். அவளிடம் என்ன ஏது என்று ஆறுதல் கூற எனக்கு மனம் வரவில்லை. விரக்தியில் கழிப்பறை பக்கமாக சென்று வழமையான இடத்தில் நண்பன் ஜோனியுடன் இரண்டு சிகரெட்டுகள் ஒரேயடியாக புகைத்து முடித்த ஞாபகம். பின்பு எக்ஸாம் லீவு.

அடுத்த ஒரு வாரத்தில் அபேவர்தன அழைத்தான். விஷயம் தெரியுமாடா, அவளுக்கு ஜோனி மேல் விருப்பமாம். ஆனால் ஹிருணியுடன் ஜோனி செட்டாகி விட்டான்' என்றான். சில நிமிடங்கள் மூளையின் நாளங்கள் ஜிவ்வென்றாகிவிட்டன. அந்த ஹிருணி வேறாருமில்லை அவளின் உற்ற தோழிகளின் ஒருத்தி. அவள் எக்ஸாமுக்கு ஒருவாரம் முன்பாக படிக்காமல் ஹிருணிக்கு காய்ச்சல், உடல்வலி என்பதற்காக கால்களை அமிக்கிவிட்ட கதையை ஒருமுறை என்னிடம் மட்டும் இரகசியமாக கூறியிருந்தாள். ஹிருணி ஆறு வருடங்களாக காதலித்த ஒரு இன்ஜினியரை இரவோடு இரவாக கழற்றிவிட்டிருந்தாளாம் ஜோனிக்காக. மன நிலை குழம்பியதால் அந்த இன்ஜினியர் சைக்கார்டிக் கிளினிக் போகிறான் என்றும் அபேவர்தன தான் கூறியிருந்தான். அவள் தனது ரூம்மேட்டிடம் கூட தான் ஜோனியைக் காதலிப்பதாக கூறவில்லை.ஆனால் காய்ச்சலுடன் இருந்த ஹிருணியிடம் மட்டும் கூறியிருந்தாள் என்பது மேலதிக தகவல். கல்நெஞ்சக்காரி ஹிருணி.

அவள் மைண்ட் பூ ராகவும் ஜோனிதான் இருந்திருக்கிறான். அழக்கூட மனம் வரவில்லை பட்டாம்பூ ச்சியின் சிறகுகளை பிடித்து நசுக்கி விட்டதாக ஒரு உணர்வு. இரவோடிரவாக ஒரு பக்கெட் சிகரெட்டை காலியாக்கி அழுது தீர்த்தது தான் மிச்சம். அதைவிட அவள் மனம் புரியாமல் அவளை ஆசைப்பட்டு இருக்கிறேன் என்பதை எண்ணி வெட்கப்படத் தான் முடிந்தது. வெள்ளந்தியாக இருந்தது நான் மட்டும் தானா. போட்டிபோட்டு காதலிக்கும் அளவுக்கு ஜோனி நல்லவனும் அல்ல. புறக்கணிக்கப்பட்டேன் என்பதற்காக நான் கெட்டவனும் அல்ல.

லீவு முடிந்து ஒரு நாள் சனிக்கிழமை காலையில் சாப்பிட கான்டீன் போனேன். ஜோனி அவனின் ஷிருணியுடன் மேசையில் கொப்பிகள், லாப்டாப்பும் திறந்திருக்க ரொமேன்ஸ் பண்ணிக்கொண்டிருந்தான். நான் ஓரமாக ஒருபக்கம் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தேன். ஷிருணியின் உதட்டை உறிஞ்சி முடித்தவுடன் தான் நான் வந்திருக்கிறேன் என அறிந்து □ஹாய், குட் மோர்னிங்□ என்றான். ஷிருணி விடுதிக்கு சென்ற பின்னர் என்னுடன் வந்து சகஜமாக பேச ஆரம்பித்தான். நானும் பேசினேன் ஆனால் மனம் திறந்தல்ல. சில நாட்கள் கழித்து ஜோனியுடன் கழிப்பறை பக்கமாக நின்று சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தேன். ஏதோ ஒரு பேச்சில் 'அவளை யாராலும் காதலிக்க முடியுமா? அவள் கறுப்பி என்றான். இப்போது கூட தோலின் நிறம் தான் காதலை தீர்மானிக்கிறது என்று மனப் பிராந்தியில் இருக்கும் பிளடிபூ ளிடம் அவளின் மனதின் நிறம் பற்றி கதைப்பதில் பயனில்லை என்று விட்டு விட்டேன். பிறகும் கூட அவளை விடுதியில் விடுவதுண்டு. அவளுக்கு உணவு வாங்கிக் கொடுப்பதுண்டு.ஆனால் இந்த விஷயமாக எதுவும் கேட்டதில்லை. அவளுக்கு அதைப்பற்றி பேச விரும்பமில்லாமல் இருக்கும் என்று மனதைத் தேற்றிக் கொள்வேன்.

இதெல்லாம் முடிந்து நிறைய நாட்களுக்குப்பின் காம்பஸிக்கு வெளியே இருந்த வாங்கில் பேசிக் கொண்டு இருந்தோம். அவளாக நடந்த கதைகளை என்னிடம் சொல்ல ஆரம்பித்தாள். நான் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேன். அழகிய ஓவியமொன்று அழுது கரைவது போலிருந்தது. மீண்டும் அவளை விடுதிக்கு ஏற்றிச்செல்கையில் அவள் என்னை என்றுமில்லாமல் கட்டிப்பிடித்துக்கொண்டு வந்தாள். விடுதியின் படலையை திறந்த அவளை அழைத்து. "அயம் இன் லவ் வித் யூ . நான் ஜோனியைப் போல் அல்லாமல் பியோர் கெட்டவன். tough times never last but tough people do." என்று கூறிவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிவிட்டேன். இரண்டு நாட்கள் அவளுடன் பேசக்கூட தைரியம் வரவில்லை. மூன்றாவது நாள் என்னை அழைத்து "சிகரெட் புகைப்போமா?" என்றாள். நான் தான் வாங்கிவந்தேன். புகைக்கப்பழகிக்கொண்டே "லவ் யூ " என்றாள். புரையேறி இருமத் தொடங்கியது.

இப்போதெல்லாம் புகைப்பதில்லை. அன்று புகைத்தது தான். இப்போது எக்ஸாமில் எனக்கு திருட்டுத்தனமாகவெல்லாம் விடை சொல்லித்தருகிறாள். அவள் போல யாருக்கும் மனம் வெள்ளையில்லை என்பதை நான் கூறினால் ஜோனியைத் தவிர அவளை அறிந்த யாவரும் ஒப்புக்கொள்வர். இன்று அவள் என் ஒட்டுமொத்த ஹாஸ்யமாய், சிருங்காரமாய், அற்புதமாய் ஆகிவிட்டாள்.

அவளும் ஒரு மின்மினி பூச்சி தான். இப்போது விடுதியின் வீதியும் இரவுகளும் என் வாழ்வும் கூட மின்மினிப் பூ ச்சிகளால் தான் வெளிச்சம் பெறுகின்றன.



# மூன்றாம் உலகப்போர்.

றொபின்
புன்னாலைக்கட்டுவன்

இன்னும் சிலகாலம் தான்
கடந்து செல்ல வேண்டும்
மூன்றாம் உலப்போருக்கு
தயாராகுங்கள் யாவரும்.

நிலத்திற்கான போரல்ல
நிதிக்கான போரல்ல
நீதிக்கான போருமல்ல
நீருக்கான போர்.

காடுகள் யாவும்
காணமல் போயிருக்கும்
கிணறுகளெல்லாம் உவராகியிருக்கும்
உலக நாடுகள் யாவும்
நன்னீர் நிலைகளுக்காய்
ஆயுதமேந்தும்.

பசுமை நிலமெல்லாம்
பாலைவனமாகும்
பயிர் செய்ய நீரின்றியே சனம்
பட்டினியால் சாகும்.

குடங்களுடன் கூட்டங்கள்
அலைமோதியே அடிபட்டுச் சாகும்
முதலாளி வர்க்கம்
கிணற்றைச் சுற்றி
இரும்புக் காவலிடும்.

ஒரு துளி நீர்
ஒரு இலட்சத்திற்கு
விற்பனையாகும்
சீதனமாக நீர் கேட்பார்கள்.

ஆழத் தோண்டினாலும்
ஆங்காங்கு மட்டுமே
அமிர்தமாய் கிடைக்கும் அதனால் நீர்க்
கொள்ளையர்கள் உருவெடுப்பார்கள்.

ஆளுக்கொரு போத்தல்
நீரென்ற திட்டம் வரும்
அப்போதே பணம்போல்
பாதுகாப்பார்கள் நீரையும்

ஆய்வுகூடங்களில்
அவசர அவசரமாய்
ஆராய்ச்சிகள் நடக்கும்
செயற்கை நீர் தயாரிப்பதற்காக

நீர் நிலைகளெல்லாம்
வற்றியே கிடக்கும்
நீர் வாங்குவதற்காய்
வங்கியில் கடன் பெற வேண்டும்.

இறுதியாக ஒருமுறை
நீரை சுவைத்துக் பருகுங்கள்
இதுதான் நீரென உங்கள் சந்ததிக்கு
காட்ட புகைப்படம் எடுத்து
வையுங்கள்.

நீரின்றி இறப்போர் தொகை
நாளுக்கு நாள் ஆயிரங்களைத்
தாண்டும்
நீரின்றி அழியப்போவது
மனித இனம் மட்டுமல்ல
இவ்வுலகும்தான்.

இந்திய அணிக்குள் வருவதும் போவதுமாக இருந்த யுவராஜ் சிங் இற்கு இந்த அழைப்பு தனக்கென ஒரு நிரந்தர இடத்தை இந்திய அணியில் ஏற்படுத்திக் கொள்ள சிறந்த வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். ஆனால் தொடரில் ஏற்கனவே மூன்று போட்டிகளில் சிம்பாவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று 2:1 என்ற நிலையில் முன்னிலையில் வேறு இருந்தது. நான்காவது போட்டியில் ஆடும் பதினொருவரில் யுவராஜ் சிங் இற்கு வாய்ப்பு கிடைத்தது. சிறந்த போ:ர்மில் இருந்த யுவராஜ் ஐதராபாத் மைதானத்தில் நடந்த அந்த போட்டியில் மிகவும் அதிரடியாக ஆடி 60 பந்துகளில் 80 ஓட்டங்களை குவித்து ஐந்து இலக்குகளால் இந்திய அணிக்கு வெற்றி தேடித் தந்ததோடு போட்டியின் ஆட்டநாயகனாகவும் தேர்வானார். இறுதி ஒரு நாள் போட்டியிலும் வாணவேடிக்கை காட்டிய யுவராஜ் சிங் 52 பந்துகளில் 75 ஓட்டங்களை குவித்ததோடு ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக மொங்கியாவுடன் 157 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார். இந்த போட்டியில் மொங்கியா சதம் விளாச இந்திய அணி சிறப்பான வெற்றி ஒன்றுடன் தொடரை தம்வசப்படுத்தியது. அடுத்ததாக நடைபெற்ற மேற்கத்திய தீவுகளுடனான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் யுவராஜ் ஏமாற்றினாலும் சகலதுறை இளம் வீரர் ஒருவரின் நம்பிக்கையை சிதைத்து விட கங்குலி தயார் இல்லை என்றால் மிகையாகாது. அடுத்து 2002 இல் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணியில் யுவராஜ் சிங் வாய்ப்பு பெற்றார்.




அக்னி

## “2002 Natwest தொடர்”

இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க தொடராக மாறிய ஒரு தொடர். ஆம் வேறு ஒன்றும் இல்லை. இந்தியாவில் நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் வென்று தொடரை இங்கிலாந்து அணி சமன் செய்ததும் இங்கிலாந்தின் ஆண்ட்ரூ ப்ளின்டாப் தனது சட்டையை கழட்டி சுற்றி இந்திய அணியை வெறுப்பேத்தி இருந்தார். அதற்கு பதிலாக லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப் போட்டியை இந்திய அணி வெற்றி பெற்றதும் பல்கனியில் இருந்த கங்குலி மிக ஆவேசமாக



தனது சட்டையை கழட்டி சுற்றி இருப்பார். இன்றும் கிரிக்கெட் இரசிகர்களால் நினைவில் வைத்திருக்க கூடிய சம்பவமாக இது இருக்கிறது என்றாலும் மறுப்பதற்கில்லை. இந்த ஒரு நாள் தொடர் இந்தியா, இங்கிலாந்து, இலங்கை அணிகள் பங்கேற்ற ஒரு முத்தரப்பு தொடராக அமைந்து இருந்தது. இந்த தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக மூன்று இலக்குகளை சாய்த்ததோடு ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை பெற்று இந்திய அணிக்கு வெற்றி தேடித் தந்ததோடு ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இந்த தொடரின் ஏனைய போட்டிகளில் துடுப்பாட்ட வரிசையில் பின்னர் ஆடப்பணிக்கப்பட்ட யுவராஜ் பொறுப்பான இணைப்பாட்டங்களை ஆடி வெற்றிக்கு உதவிக் கொண்டு இருந்தார். லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று இருந்தன.



இந்த இறுதிப் போட்டி யுவராஜ் சிங் மற்றும் இவரது இளையோர் உலகக்கோப்பை அணித்தலைவர் முகமது கை:ப் இருவருக்கும் ஒரு மறக்க முடியாத போட்டி என்றாலும் மறுப்பதற்கில்லை. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 325 ஓட்டங்களை பெற்று கொண்டு இந்திய அணிக்கு பெரிய இலக்கு ஒன்றை நிர்ணயித்து இருந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஒரு கட்டத்தில் 24 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களுடன் தடுமாறிக் கொண்டிருந்தது. ஆனாலும் ஆறாவது விக்கெட் க்காக ஜோடி சேர்ந்த யுவராஜ்-கைப் இணை தமக்கிடையே 121 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டது. இதில் யுவராஜ் சிங் 63 பந்துகளில் 69 ஓட்டங்களை பெற்று இருந்தார். இறுதியில் இந்திய அணி இரண்டு இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை வென்றது. இந்த போட்டியின் முடிவில் கங்குலி சட்டையை கழட்டி சுற்றியது விமர்சனங்களுக்கு உள்ளானாலும் 2000 ஆண்டுக்கு பிறகு ஒன்பது இறுதிப் போட்டி தோல்விகளிற்கு பிறகு இந்திய



அணி பெற்றுக் கொண்ட இந்த வெற்றி இந்திய அணிக்கு ஒரு உத்வேகத்தை கொடுத்தது என்றே சொல்லலாம். இந்த தொடர் மூலம் மேற்கத்திய தீவுகளில் அடுத்த வருடம் நடைபெற இருந்த உலகக்கோப்பைக்கான உத்தேச அணி ஒன்றை கங்குலி தெரிவு செய்து இருந்தார் எனலாம்.

இந்த Natwest தொடரின் பின்னர் இடம்பெற்ற சாம்பியன் கிண்ணம், மேற்கிந்திய தீவுகள் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான தொடரில் ஒன்று இரண்டு அரைச்சதங்களை பெற்றாலும் ஓட்டங்களை குவிக்க தடுமாறிக் கொண்டிருந்தார் யுவராஜ். ஆனாலும் 2003 இடம்பெற்ற உலகக்கோப்பை அணியில் யுவராஜ் வாய்ப்பு பெற்றார்.



இந்த உலகக்கோப்பை தொடர் முழுவதும் சச்சின் டெண்டுல்கர் என்ற பிரம்மாஸ்திரம் ஏனைய வீரர்கள் அனைவரதும் பெறுபேறுகளை மறைத்து இருந்தது. இந்திய அணி இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவுடன் தோல்வி அடைந்திருந்தாலும் இந்த தொடரின் தொடர் நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டு இருந்தமை அவரின் பெறுபேறுகளுக்கு சான்றாக அமைந்தது. யுவராஜ் இந்த உலகக்கோப்பையில் பாகிஸ்தான் மற்றும் கென்யா அணிகளுக்கு எதிராக அரைச்சதங்களை பெற்றதோடு பகுதிநேர சுழல் பந்து வீச்சாளராகவும், துல்லியமான களத்தடுப்பாளராகவும் தன்னை நிரூபித்து கொண்டார். ஆனாலும் யுவராஜ் சிங் இன்னும் தனது இருப்பை ஆணித்தரமாக வெளிக்காட்டவில்லை என்பது உண்மையே. கிரிக்கெட் வீரர்கள் எவ்வளவு சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக இருந்தாலும் புள்ளி விவரங்கள் என்று வரும் போது சதங்கள், அரைச்சதங்கள் என்பதே கணக்கில் வரும். மூன்று வருடங்களில் யுவராஜ் தனது கன்னிச்சதத்தை பதிவு செய்யவில்லை.




**யுவராஜ் சிங் தனது சதத்துடன் தன்னை நிரூபிப்பார்....**


# நீங்களும் இணையலாம்!!!

- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?
- புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?
- ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?
- பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

thumi2016@gmail.com

தூமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம்.
மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.